Regisered as a News Paper in Ceylon ★ ★ விலை: சதம் 15



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

EELA NADU

தேசிய தினசரி

கேட்டு வாங்குங்கள்
சங்கு மார்க்
பித்தளைப் பிணைச்சல்கள்
இரண்டுபக்கமும் தறையப்பட்டது
கிடைக்குமிடம்:-
கதிர்ஹாட் வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

மலர் 13 பங்குனி 18 ஸபர் 4 (1—4—71) வியாழக்கிழமை இதழ் 50

# "கி. பாக். மக்களுக்கு உலக நாடுகள் உதவவேண்டும்"

## பரிவும் ஆதரவும் தெரிவித்து பாரத ஆட்சிமன்றம் தீர்மானம்

புதுடில்லி, மார்ச் 31 கிழக்குப் பாகிஸ்தான் மக்களுக்கு இந்திய மக்களின் ஆதரவைத் தெரிவிக்கும் தீர்மானம் இன்று இந்திய ஆட்சிமன்றத்தின் இரு சபைகளிலும் ஏகமனதாக நிறைவேறியது. கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் தங்கள் ஜனநாயக வாழ்வு முறைக்காகப் போராடிக் கொண்டிருப்பதற்கு இந்திய மக்களின் இதயபூர்வமான ஆதரவும் உதவியும் உண்டென அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது

இத்தீர்மானத்தை இரு சபைகளிலும் பிரதமர் இந்திரா காந்தி கொண்டு வந்து பேசுகையில், 'கடந்த டிசம்பரில் தேர்தல் முடிவடைந்த மகிழ்ச்சியில் திளைத்திருந்த வீரம் மிக்க வங்காள மக்களுக்கு இப்படிப்பட்ட பரிதாபகரமான சோக நிகழ்ச்சி நடந்திருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது. அவர்களுடைய அழகான நாட்டில் அமைதியுடன் வாழ உலகநாடுகள் உதவிபுரியவேண்டும்' என்றார்.

இரு சபைகளிலும் நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

இந்தியா அமைதியிலும் மனித உரிமைகளை நிலைநிறுத்தவேண்டுமென்பதிலும் ஈடுபாடுடன் உழைத்துவருவதினால் அதற்கு அண்மையிலுள்ள ஒரு நாட்டில் பாதுகாப்பற்ற அப்பாவி மக்களின் துன்பங்களையும் துயரங்களையும் போக்க அவசரமான ஆக்கவேலைகளை உலகமக்களும் உலக நாடுகளும் செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறது கிழக்குப் பாகிஸ்தானில் வாழும்

(8-ம் பக்கம் பார்க்க)

## உள்நாட்டு விவகாரமாம்

### பாக், தூதரகம் அறிக்கை

கோட்டை, புதன்

கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள நிலைமை முழுதும் உள்நாட்டு விவகாரம் என இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் மீண்டும் வலியுறுத்தியிருக்கின்றது.

பாகிஸ்தான் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தியா பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரங்களில் குறுக்கிடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் விவகாரங்களில் இந்தியாக் குறுக்கிடுவதின் பிரதிகூலங்கள்பற்றி சிங்கப்பூர் பத்திரிகை யொன்று எச்சரித்திருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மீண்டும் தெரிவுக்குழு

கொழும்பு, புதன்

முன்னாள் அமைச்சர் திரு. வி. சுகததாசா காணிவாங்கியது சம்பந்தமாக ஆராய்ந்த ஆட்சிமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணைகள் முடிவடையாததால் அத்தெரிவுக்குழு மீண்டும் ஏப்ரல் நாலாந் திகதி நியமிக்கப்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. முதன் முதலில் தெரிவுக்குழு முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் நியமிக்கப்பட்டது. திரு பீட்டர் கெனமன் தலைமை

(8-ம் பக்கம் பார்க்க)

## படுகொலையை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்தவே நாம் பாடுபடுகிறோம்

புதுடில்லி மார்ச் 31 பாகிஸ்தான் உள்விவகாரங்களில் இந்தியா தலையிடுவதாக பாகிஸ்தான் சாட்டியகுற்றச்சாட்டை ஐ. நாவில் உள்ள இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி திரு. சமர் சென் மறுத்துள்ளார்.

கிழக்குப் பாகிஸ்தானில் நடப்பவற்றை உலகமக்கள் உணரக்கூடிய முறையில் சர்வதேசசட்ட முறைகளுக்குப் புறம்பல்லாத வகையில் நடப்பதே எமது நோக்கம் ஐ. நா. சாசன விதிகளை மீறாமல் இவ்விஷயத்தில் ஓர் சமாதான ஏற்பாட்டைச் செய்வதே எமது நோக்கமேயன்றி உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதல்ல என்று பத்திரிகைகளுக்களித்த செய்தி ஒன்றில் சமர் சென் தெரிவித்தார் அந்த வகையிலேயே பிரிட்டன் அமெரிக்கா சிரியா ஆர்ஜன்டைனாபோன்ற மற்றுமுள்ள நாட்டுப் பிரதிநிதிகளையும் ஐ. நா, பொதுக்காரியதரிசி ஊதாண்டையும் சந்தித்ததாகவும், ஊதாண்ட் இது பற்றித்தான் ஆராய்வதாக தம்மிடம் வாக்களித்துள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்

### பிரிட்டன் ஆட்சேபம்

அண்மையில் நடந்த உள்நாட்டுக்கலகத்தின் பொழுது டாக்காவிலுள்ள பிரிட்டன் கன்சலகமும் நூலகமும் இராணுவத்தினால் தாக்கப்பட்டதற்கு பிரிட்டிஷ் அரசு பாகிஸ்தானிடம் ஆட்சேபனைதெரிவித்துள்ளது.

### அமெரிக்கா கவலை

இங்குநடைபெறும் நிகழ்ச்சிகளையிட்டு நிக்சனின் அரசாங்கம் பெரும் கவலை கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

அமெரிக்காவினால்கொடுக்கப்பட்ட அமெரிக்க ஆயுதங்களைக்கொண்டு அப்பாவி மக்களை அரசினர் படுகொலை செய்வதினால் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு இராணுவ சாதனங்களைக் கொடுப்பதையும் இராணுவ வீரர்க

(8-ம் பக்கம் பார்க்க)

நன்றி நவிலல்

காலஞ்சென்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வேலாயுதத்தின் மனைவி திருமதி செல்லம்மா அவர்களின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் பல விதத்திலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வே. நமசிவாயம்
கோண்டாவில் வடக்கு.

3226

## சுவீப் முடிவுகள்

கொழும்பு வியாழன்

நேற்று இழுக்கப்பட்ட மகாஜனசம்பத சுவீப் முடிவுகள் வருமாறு:

ஒவ்வொரு ஆங்கில எழுத்துக்குப் பின்னால் ஒவ்வொரு சைபரையும் (0) சேர்த்துக் கொள்க.

முதலாவது பரிசு
05 Y 00650 ரூ 42,200

2-வது பரிசு
10 J 00182 ரூ 42 200

3-வது பரிசு
15 G 00565 ரூ 42 200

ஆறுதல் பரிசுகள் சில வருமாறு.

| | |
|---|---|
| 04 H 00111 | 18 Y 00184 |
| 15 H 00550 | 12 M 00649 |
| 10 D 00313 | 06 R 00203 |
| 09 C 00849 | 13 S 00130 |
| 01 S 00988 | 03 B 00881 |
| 09 H 00741 | 13 N 00529 |
| 11 H 00277 | 04 R 00330 |
| 01 T 00884 | 05 E 00151 |
| 05 E 00056 | 09 T 00394 |
| 11 T 00724 | 16 G 00571 |

(8-ம் பக்கம் பார்க்க)

## அரசாங்க லிகிதர் சேவை ஒருமுகப்படுத்தப்படும்

### பொன்விழா கூட்டத்தில் தகவல்

யாழ்ப்பாணம், வியாழன்

அரசாங்கத்துக்கு விரோதமாக நடக்கும் இயக்கத்துக்கு முதலாளித்தத்துவ பிற்போக்குவாதிகள் பின் நிற்கின்றனர். இதனால்தான் தொழிற்சங்கங்கள் அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுத்து வருகின்றன. யாழ் நகர மண்டபத்தில் நேற்று நடந்த அரசாங்க லிகிதர் சேவைச்சங்க பொன்விழாவில் சங்கத்தலைவர் கே. எம். கருணாரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: லிகிதர் சேவையை ஒருமுகப்படுத்துவது பற்றிய விஷயம் மந்திரிசபையின் தீர்மானத்துக்கு விடப்பட்டிருக்கிறது. இதுபற்றி அடுத்த வாரம் முடிவுசெய்யப்படுமென அறிகிறோம்.

திரு ஏ. விசுவநாதன் பேசுகையில் கூறியதாவது: அரசாங்க ஊழியர் கடமைகளையும் உணர்ந்து இச் சந்தர்ப்பத்தில் மக்களுடன் பரவலாகக் கலந்து அவர்களின் கோரிக்கைகளை பிரச்னைகளை தீர்த்து சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்க வேண்டும். திரு மு. கார்த்திகேசன் உட்பட மற்றும் பலர் பேசினர்.

வெள்ளி
...... ஏப்ரல் '71
★ இலங்கையில் ஸ்ரீமாவோ!
இந்தியாவில் இந்திரா!
★ கெட்டிக்கார கருணாநிதி
★ ஜே. ஆரும் பெரேரும்
★ ராதாவும் காதலிக்க தொடங்கிவிட்டாள்!
இன்னும் சுவையான செய்திகள் பல, பல, பல!
விலை சதம். 40 30
226, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30am & 4 15 p.m.
Michael York
Susan George
in
THE STRANGE AFFAIR

6-30, 10-00 மணி
சிவாஜி கணேசன்
நடித்த
லக்ஷ்மி
கல்யாணம்

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30,
ராஜன் - சௌகார் ஜானகி
நடித்த
துணைவன்
தினசரி இரவு 10-00
எம்.ஜி.ஆர். - அஞ்சலிதேவி
நடித்த
சர்வாதிகாரி

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்
கே. ஆர். விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி

இன்னும் சில தினங்களுக்கு மட்டும்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர் - லெட்சுமி
முத்துராமன் - நிர்மலா
நடித்த
வீட்டுக்கு வீடு

வின்ஸர்—யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ மாஸ்டர் பிரபாகர்
★ பேபி சுமதி ★ லட்சுமி
மனோரமா, வி.எஸ்.ராகவன், சுருளிராஜன்
சீர்காழி கோவிந்தராஜன்
நடிக்கும்
வா ராஜா வா
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர். (இருவேடங்களில்)
சரோஜாதேவி
ரத்னா
நடித்த
எங்க
வீட்டுப்பிள்ளை

இன்னும் சில தினங்கள் மட்டும்
கெப்பிட்டல் (கொழும்பு)
விஜயா (மட்டக்களப்பு)
சிவாஜி - காஞ்சனா
நடித்த
சிவந்த மண்

வெகு விரைவில்
சினிமாஸ் திரைகளில்
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
நடித்த
மூன்றெழுத்து
(கலர்ப்படம்)



## வாடகைக்கு

பஸ்நிலைய முன்பாக ஜூபிளி பஜாரில் 3.000 ச. அடி. அளவுள்ள சகல வசதிகளுடன் கூடிய பரந்த மண்டபம் வாடகைக்கு உண்டு. வியாபாரம், நிர்வாகம் (Hall) அல்லது தொழிற்சாலை அமைக்கச் சிறந்த இடம்.

போன்: 515

விபரங்களுக்கு,
5 & 7, கிரௌன்பஜார்,
யாழ்ப்பாணம்.

3227


## நெல்லியடிப் பட்டின சபை கேள்வி விளம்பரம்

1971-ம் ஆண்டு சித்திரை மாதம் 10-ந் திகதி (10-4-1971) முற்பகல் 10-30 மணி வரைக்கும் மேற்படி பட்டின சபைத் தலைவரால் கீழ்க்காணும் வேலைக்கு பதிவு செய்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து 'சீல்' வைத்த கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

கேள்விகள் ஒவ்வொன்றிற்கும் கேள்விப் பிணைப் பணம் ரூபா 50/-ம் பத்திரப் பணம் ரூபா 5/-ம் செலுத்தியதன் பேரில் 8-4-71 முற்பகல் 11-30 மணி வரை பட்டினசபைத் தலைவரால் வழங்கப்படும் உத்தியோக பூர்வமான பத்திரத்தில் கேள்விகள் அனுப்பப்பட வேண்டும்.

கேள்வியை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு எச்சமயத்திலும் பூரண உரிமையுண்டு. ஏனைய விபரங்கள் யாவும் பட்டினசபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

ச. வ. தேவசகாயம்,
தலைவர்,
பட்டினசபை,
நெல்லியடி.

பட்டின சபை அலுவலகம்,
நெல்லியடி, கரவெட்டி,
29-3-71.

### வேலையின் விபரம்

1. எக்லைத் தெரு (17-ம் வட்டாரம்-மிகுதி வேலை) கல்லுப் பதித்து தார் ஊற்றல். 3228

## தொழிற்சாலை நிறுவப்படும்

சிலாபம், புதன்

சிலாபம், மாதம்பை பகுதியில் ரப்பர் மெத்தை தொழிற்சாலை ஒன்றை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதனால் இப்பகுதியில் சுமார் 600 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.


நாகம்ஸ் சினிமா
கன்னாகம்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா
நடித்த
புதிய பூமி

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
ராஜன்-புஷ்பலதா
நடித்த
கற்பூரம்

REGAL - Jaffna
Daily 4-45, 7& 9-45 p m
Poya days 4 Shows
Robert Ryan
Chuck Connors
in
CAPTAIN NIMO & HIS UNDER WATER CITY
(Cinemascope)


## சுழிபுரத்தில் விளையாட்டுப் போட்டி

சுழிபுரம், புதன்

வட்டுக்கோட்டை வட்டாரப் பாடசாலைகளின் விளையாட்டுப்போட்டி சுழிபுரம் விக்ரோசறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. வட்டாரக் கல்வியதிகாரி திரு. பி. சச்சிதானந்தம் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவுக்கு வடமாகாணக் கல்வியதிகாரி டபிள்யூ. டி. ஸி. மகாதந்தில பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். பதினைந்துக்கு மேற்பட்ட பாடசாலைகள் போட்டியில் பங்குகொண்டன.

......

## ஆசிரியர் வெற்றியீட்டினர்

பருத்தித்துறை, புதன்

நேற்று முன்தினம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் கோஷ்டிக்கும், மாணவர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் ஆசிரியர் கோஷ்டி 2 : 1 ஆட்டங்களால் வெற்றியீட்டியது. திரு. வி. வீரகத்தி ஆசிரியர் கோஷ்டிக்குத் தலைமைதாங்கினார். திரு எஸ். நாகேந்திரம் மத்தியஸ்தம் வகித்தார்.

......

யாழ். சிங்கள ம. வி

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், வியா.

யாழ். சிங்கள மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். விளையாட்டரங்கில் ஆரம்பமாகவுள்ளது.

இவ்விளையாட்டுப்போட்டி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமால் அமரசேகரா தலைமையில் நடைபெறும்.

திருமதி விமால் அமரசேகர போட்டியில் வெற்றி பெறுவோருக்கு பரிசில்கள் வழங்குவார்.

கல்லூரி அதிபரான திரு. இ. பி. வி. எதிர்வீரா, கல்லூரி விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு. ஏ. மி. நுகேகொட ஆகியோரின் மேற்பார்வையில் இவ்விளையாட்டுப் போட்டி நடைபெறும். (தே. நி)

......

## 'வாழ்வில் வெற்றிபெற...'

சுழிபுரம், புதன்

"சைவர்களாகப் பிறந்த நாம் எமது சமய உண்மைகளை நன்கறிந்து அதன்படி ஒழுகி உலகெல்லாம் மேன்மைகொள்ளும்படி சைவநீதியை நிலைநாட்ட வேண்டும். எமது நாயன்மார்கள் வாழ்ந்து காட்டிய பாதையில் சென்று இறைவனின் பாதாரவிந்தத்தை யடையவேண்டும். விருப்பு வெறுப்பின்றி நன்மையையும் தீமையையும் ஏற்று வாழ்வோமானால் எமது வாழ்வு பெரும் வெற்றியடையும்' எனப் பண்ணாகம் சிவத்தலை முருகமூர்த்தி கோவிலில் சமயச் சொற்பொழிவு நிகழ்த்துகையில் பண்டிதர் இராசிவசுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள EL 6000 தொடர்பிலக்கமுள்ள A 30 விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: அ. பேரம்பலம் அன் சன்ஸ், 3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2741


## பெற்றோரே கண்டிப்பாக இருங்கள்'

வெள்ளவத்தை, புதன்

"சைவசமயம் எல்லாச் சமயங்களையும் கடந்தது. கட்டுப்பாடுகள் இல்லாது சுதந்திரமாகவே மனிதன் இறைவனை வழிபடச் செய்வது சைவம். இன்றைய விஞ்ஞானம் உணர்த்தும் அரியபல உண்மைகளைச் சைவ சித்தாந்த நூல்கள் என்றோ எமக்கு உணர்த்தியுள்ளன. இக்காலத்தில் இளைஞர்கள் மதியில் மத நம்பிக்கை குன்றி வருகின்றது. சைவ ஆகமங்களைக் கற்றுணராமலேயே இவர்கள் மதத்திற்கு எதிரான பிரச்சாரங்களைச் செய்கிறார்கள். இவர்கள் விஷயத்தில் பெற்றோர் மிகவும் கண்டிப்பாக இருக்க வேண்டும்'

இவ்வாறு தபால் தந்திப் போக்குவரத்துத் திணைக்கள இந்து ஊழியர் கழகத்தில் உரை நிகழ்த்திய கணக்குப் பிரிவுகளின் உதவி நிர்வாக அதிபர் திரு. கே வல்லியசிங்கம் கூறினார்.

## திருக்கோணேஸ்வரம் கொடியேற்றம்

திருக்கோணமலை, புதன்

பாடல் பெற்ற திவ்விய தலங்களுள் ஒன்றான கோணேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் ஏப்ரல் மாதம் 9-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது. 26 27-ந் திகதிகளில் முறையே தீர்த்தம், பூங்காவன உற்சவம் ஆகியன நடைபெறும்.

## கி. ச. தலைவர்

எழுதுமட்டுவாழ், புதன்

முகமாலைக் கிராமசபையின் இரண்டாம் வட்டார உறுப்பினராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்ட திரு. அ. ஸ்ரனிஸ்லாஸ் கிராம சபையின் தலைவராகவும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

......

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 1—4—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

**344 மீ அன் 61 மீ**

6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ அன் 49 மீ**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீ அன்ட் 61 மீ**

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு, 4-45 சங்கமம், 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 மாணவர்மன்றம்.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 நாட்டுப்பாடல்கள், 6-45 வீட்டு வைத்தியர், 7-00 பேச்சு, 7-05 வாத்திய இசை, 7-15 வயலின், 7-45 குறளிசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்தித்தொகுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்கா நகரை முஜிபுர் படைகள் கைப்பற்றின

## 3 பட்டாலியன்கள் மாணவர்களைச்சுட்டனவாம்

## விமான நிலையத்தில் தீ

புதுடில்லி மார்ச் 31

**டாக்கா நகரை ஷேக் முஜிபுர் ரஹ்மானின் ஆதரவுப் படைகள் கைப்பற்றியுள்ளதாக அஹர்த்தலாவில் இருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.**

கிழக்குப் பாகிஸ்தான் நகரங்களிலும் கிராமப் புறங்களிலும் மாமூல் நிலைமை இருந்துவருவதாக பாகிஸ்தான் வானொலி தனது செய்தியில் ஒலிபரப்பியபோதிலும், மற்றச் செய்திகள் அங்கு பல இடங்களிலும் கடும்சண்டை நடப்பதாகவே தெரிவிக்கின்றன.

டாக்கா நகரில் முஜிபுர் ஆதரவுப் படைகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே நேருக்கு நேர் சண்டைநடைபெற்ற இறுதியில் முஜிபுர் ஆதரவுப் படைகள் டாக்காவைக் கைப்பற்றியுள்ளதாக அஹர்த்தலாவிலிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன. டாக்கா, [ராவ்சாகி நகரங்கள் மீது அரசின் விமானப்படைகள் குண்டு வீசித் தாக்குவதாகவும் ராவ்பூர் பகுதியை முஜிபுர் ஆதரவுப் படைகள் கைப்பற்றியுள்ளதாகவும் பெரும்பாலான நதித்துறை முகநகரங்களை அவை கைப்பற்றியுள்ளதாகவும் தம் வசம் வைத்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன

### அன்னியக் கப்பல்கள் நடுக்கடலில்

சிட்டாங் துறைமுகத்தில் ஏற்பட்ட தீயினால் துறைமுகத்தின் பலபகுதிகள் அழிந்துவிட்டதாகவும் அதனால் அங்கு நங்கூரமிட்டிருந்த அந்நியக் கப்பல்கள் அங்கிருந்து [விலகி நடுக்கடலுக்குச் சென்று நங்கூரமிட்டிருப்பதாக அக் கப்பல்களிலிருந்து கிடைக்கும் செய்திகளிலிருந்து தெரியவருகிறது.

கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெற்றதாகச் சொல்லப்படும்சம்பவங்கள்பற்றிய செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. லண்டன் ரெலிகிராப் நிருபர் திரு. சைமன் ரஸ்க் இச் செய்திகளை வெளியிட்டுள்ளார். டாக்காவிலிருந்து நிருபர்களை வெளியேற்றிய பொழுது இவர் மட்டும் அவர்களிடமிருந்து தப்பி பல செய்திகளை சேகரித்துள்ளார். இவர் பாங்கொக் வழியாக லண்டன் வந்து சேர்ந்ததும் இத் தகவல்களை வெளியிட்டார்.

### தொடர்ந்து கொலை வெறி

பாகிஸ்தானிய இராணுவம் மூன்று நாட்களாக அப்பாவிமக்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும், 15 மணி நேரமாக மக்களை அழிக்கும் வேலையிலேயே இவர்கள் ஈடுபட்டதாகவும் டாக்கா பல்கலைக்கழகத்திலும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் தீயிட்டனர் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், கடைகளில் தூங்கியவர்கள் சுடப்பட்டனர். மாணவர்களை மூன்று பட்டாலியன்கள் கனரகப் பீரங்கிகள் கொண்டு சுட்டனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்,

### பிரிட்டனுக்கு முஜிபுர் கடிதம்

கிழக்குப் பாகிஸ்தானில் இருந்து அவாமிலீக்கைச் சேர்ந்த ஒருவர் லண்டன் போய் சேர்ந்துள்ளார். இவர் முஜிபுர் ரஹ்மானிடமிருந்து பிரிட்டிஷ் பொது மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் கடிதம் ஒன்று கொண்டுவந்ததாகச் சொல்லப்படுகிறது.

கிழக்குப் பாகிஸ்தானில் இனப்படுகொலைகள் நடந்த வண்ணம் இருப்பதாகவும் மேற்குப் பாகிஸ்தானிய இராணுவம் டாங்கிகள், ஸ்ரென் துப்பாக்கிகள் மெசின் துப்பாக்கிகள் கொண்டு சுடுவதாகவும், டாக்காப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் மாணவர்கள் ஊழியர்களில் அதிகமானோர் இவர்களுடைய கொடுமைக்குப் பலியாகியுள்ளனர் என அவர் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார். இதனை பிரிட்டன் உட்பட மற்ற நாடுகள் தடுத்துநிறுத்த வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### சிங்கப்பூர் பத்திரிகைகள் கண்டனம்

கிழக்குப் பாகிஸ்தான்மக்கள்மீது இராணுவம் கட்டவிழ்த்துவிடப்பட்டு, படுகொலைகள் செய்யப்படுவதை சிங்கப்பூர் பத்திரிகைகள்கண்டித்துள்ளன 'ஸ்ரெயில் ரைம்ஸ்' என்னும் பத்திரிகை, கிழக்கில் நடைபெறும் நிகழ்ச்சிகள் இனி ஒருபோதும் இருபகுதியும் ஒன்று சேரமுடியாத நிலைமையை ஏற்படுத்திவிட்டன எனஎழுதியுள்ளது பிரிவினையிலேயே உருவாகிய நாடு பாகிஸ்தான். அது பிரிவினையை நாடுவதில் வியப்பில்லை என இன்னோர் பத்திரிகை எழுதியுள்ளது.

### விமானநிலையத்தில் தீ

டாக்காவில் மேலும் அக்கிரமங்கள் நடைபெறுவதாகவும் டாக்கா விமான நிலையத்தில் தீச் ஜுவாலையைத் தான் கண்டதாகவும், இந்தியவானொலி தெரிவிக்கும் செய்திகள் யாவும் நூற்றுக்கு நூறு உண்மையானதென கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வந்த அகதி ஒருவர் கூறியதாக இந்திய வானொலி தெரிவித்தது.

### மேற்கு வங்காளத்தில் இன்று பந்த்

கிழக்குப் பாகிஸ்தான்மக்களுக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவிக்கும் முகமாக மேற்கு வங்காளத்தில் 24 மணிநேர பந்து இன்று அனுஷ்டிக்கப்பட்டது. இதில் பலவேறு அரசியல் கட்சித் தலைவர்களும் தொழிலாளர் தலைவர்களும் கலந்துகொண்டனர். கலகத்தாவிலிருந்து நீண்டதூரம் செல்லும்ரயில் சேவைகள் ரத்துச்செய்யப்பட்டது விமானச்சேவையும் ரத்துச்செய்யப்பட்டன கடைகள் யாவும் மூடப்பட்டன.

### காஷ்மீர் முதல்வர் கண்டனம்

கிழக்கில் பாகிஸ்தான் இராணுவம் செய்யும் படுகொலைகளுக்கு எதிராகவும், வங்காள தேச மக்களுக்கு ஆதரவாகவும் உலக அபிப்பிராயத்தைத் திரட்ட வேண்டுமென காஷ்மீர் முதலமைச்சர் திரு. சாதிக் தெரிவித்தார்.

......

கடந்த ஒரு மாதமாக

# இழந்த பொருளாதாரத்தை மீட்க கடுமையாக உழையுங்கள்

— டிக்காகான்

கராச்சி, மார்ச் 31

கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள முக்கிய நகரங்களில் மாமூல் நிலைமை திரும்பி வழமையான வேலைகள் நடைபெற்று வருவதாக பாகிஸ்தான் வானொலிதெரிவித்தது.

அதுமேலும் கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள சிட்டகாங் உட்பட சகல நகரங்கள், கிராமப் புறங்கள் யாவற்றிலும் அமைதி நிலவுவதாகவும், அங்கு வழமையான வேலைகள் நடைபெறுவதாகவும், இப்பகுதிகள் யாவும் ராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும்அறிவித்தது

இப்பகுதிகளிலுள்ள கடைகள் மேலும் திறக்கப்பட்டுள்ளதாகவும் இரு வங்காள மொழி செய்தித்தாள்களும் இரண்டு ஆங்கில நாளேடுகளான பாகிஸ்தான் ஒப்சேவர், டெயிலி ஆகியன வெளிவருவதாகவும்,டாக்கா விமான நிலயத்திலிருந்து விமானங்கள் தங்கள் சேவையை ஆரம்பித்துள்ளதாகவும் அது மேலும் தெரிவித்தது.

### அதிகாரிவேண்டுகோள்

கிழக்குப் பாகிஸ்தான் ராணுவ அதிகாரி லெப்டினன்ட் ஜேர்னல் டிக்காகான் கிழக்குப் பாகிஸ்தான் மக்களுக்குவேண்டுகோள்ஒன்றை விடுத்துள்ளார். கடந்த ஒரு மாதகாலமாக நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரத் தேக்கத்தை நிறைவுசெய்யும்வகையில் மக்கள் கடுமையாக உழைக்கவேண்டுமென்றும், இழந்துபோன பொருளாதாரத்தை திரும்பவும் கொண்டுவர இதைத்தவிர வேறுவழியில்லை என்றும் அவர் தெரிவித்ததாக பாகிஸ்தான் வானொலி அறிவித்துள்ளது.

நாட்டில்வழமையான நிர்வாகத்தை சீர்படுத்தும் வழிவகைகளை ஆராயும் பொருட்டு திரு டிக்காகான் கிழக்குப்பாகிஸ்தான் சிவில்உயர்தர அதிகாரிகளுடன் இன்று பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், நாட்டில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. துப்பாக்கி வைத்திருப்போர் தங்கள் துப்பாக்கிகளை ஒப்படைக்குமாறும், துப்பாக்கி அவசியம் தேவையெனக்கருதும் பட்சத்தில் அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படுமெனவும் திரு. டிக்காகான் அறிவித்துள்ளாராம்.

ஆஸ்பத்திரி ஊழியர்களை தங்கள் கடமைக்குத்திரும்புமாறும் அப்படித்திரும்புவர்களுக்குத்தக்கபாதுகாப்பு அளிக்கப்படுமெனவும் [illegible] தெரிவித்துள்ளார்.

### இந்தியாவுக்கு கண்டனம்

இந்தியாவானொலியும் பத்திரிகைகளும் பாகிஸ்தான் உள்நாட்டு விவகாரங்களில் ஈடுபடுவதாகவும் அவை பொய்யான தகவல்களை கொடுப்பதாகவும் அரபு இஸ்ரேல் பிரச்னையில் தவறான தங்கள் கொள்கைகளை மறைப்பதற்கு சில நாடுகள் இச் செய்திகளை தாங்களும் வெளிப்படுத்தி வருகின்றனர் எனவும்மேற்குப்பாகிஸ்தான் அரசியல் தலைவர் ஒருவர் கருத்துத்தெரிவித்தாக பாக் வானொலி அறிவித்தது.

### சிங்கப்பூர் பத்திரிகை கண்டனம்

இந்தியாவின் கொள்கையை சிங்கப்பூர் பத்திரிகை ஒன்று கண்டித்துள்ளதாக பாக்வானொலி தெரிவித்தது.

டாக்கா வனொலி நிலயத்தின் சக்திமிக்க இயந்திரங்கள் பழுதடைந்தமையால் ஒலிபரப்பு நிறுத்தப்பட்டதாவும், சக்தி குறைந்த கருவிகளாலேயே இப்பொழுது நிலயம் இயங்குவதாக பாக் வானொலி தெரிவித்தது

### முற்பணம் வழங்கப்படும்

கோட்டை, புதன்

சிங்கள- தமிழ் புதுவருடத்தை முன்னிட்டு அரசாங்க ஊழியர்களுக்கு ஏப்ரல் மாதம் 10ந் திகதி வழங்கப்படும் சம்பளம் முற்பணமாக ஏப்ரல் 7-ந் திகதி வழங்கப்படும்.

இவ்வறிவித்தலை நிதி அமைச்சின் உதவிக் காரியதரிசி திரு. சந்திரா கூரே எல்லா தலைமை இலாகாக்களுக்கும் நிரந்தரக் காரியதரிசிகளும் தெரிவித்துள்ளார். சுற்று நிருபத்தில் அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது:-

375 ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு அவர்களுடைய சம்பளத்தில் 50 வீதமும் 375 ரூபாவுக்குக்குறைய சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு 40 வீதமும் முற்பணமாக வழங்கும்படி தெரிவித்துள்ளார்.

# பிலிப்பைன்ஸ் விமானம் சீனாவுக்கு கடத்தப்பட்டது

மணிலா, மார்ச் 31

பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்நாட்டுச் சேவையில்ஈடுபட்டிருந்த விமானமொன்றை ஆயுதமேந்திய 5 பிலிப்பைன்ஸை சேர்ந்தவர்கள் சீனாவிலுள்ள காண்டன் விமானநிலயத்திற்கு திசைதிருப்பி கடத்திச் சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மணிலாவிலிருந்து டாவோ நகருக்குச் சென்று கொண்டிருந்த இந்த விமானத்தில் பெண்கள் உட்பட 36 பிரயாணிகளும் 5 விமான ஊழியர்களும் இருந்தனர்.

இந்த விமானத்தை சீனாவிடமிருந்து பெறுவதற்கு இந்தியாவையும் பிரிட்டனையும் தங்கள் செல்வாக்கைப் பயன் படுத்துமாறு பிலிப்பைன்ஸ் வெளியுறவு அமைச்சர் இவ்விரு நாடுகளையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நாம் பணக்காரர்களாக இருக்கக்கடமைப்படவில்லை; ஆனால் ஒழுக்கம் உள்ளவர்களாக இருக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். —பெர்னட்ஷா

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் பங்குனி மாதம்
18ந் திகதி (1-4-71)

# அமைதி நிலவ உதவவேண்டும்

கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெறும் சம்பவங்கள் பற்றி எதுவுமே தெளிவாகத் தெரியவில்லை. கடுமையான செய்தித் தணிக்கை அமுலில் இருக்கிறது. கிழக்குப் பாகிஸ்தானில் நிலைமை கட்டுக்கடங்கி விட்டதாகவும் அங்கு வாழ்க்கை சீராகிவருவதாகவும் பாகிஸ்தான் அரசின் உத்தியோகபூர்வமான செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் கிழக்குப் பாகிஸ்தான் தலைநகரான டாக்காவை ஷேக் முஜிபுர் ரஹ்மானின் 'வங்காளதேச' விடுதலைப் படைகள் கடும் போராட்டத்தின் பின் கைப்பற்றியிருப்பதாகவும் பல இடங்களிலும் பாகிஸ்தான் இராணுவத்துக்கும் வங்காள தேச விடுதலைப் படையினருக்குமிடையில் தொடர்ந்து சண்டை நடைபெற்றுவருவதாகவும் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வெளியேறியவர்கள் வெளிநாடுகளில் தெரிவித்த தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுவரை மூன்று லட்சத்துக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாகவும் சிட்டகாங் துறைமுகம் தீப்பற்றி எரிவதாகவும் ஆஸ்பத்திரி மீது பாகிஸ்தான் இராணுவம் குண்டுவீசித் தாக்கியதில் அங்கிருந்த நோயாளிகள் அனைவரும் மாண்டதாகவும் மற்றும் இதுபோன்ற பயங்கரத் தகவல்களும் கிடைக்கின்றன. இச் செய்திகளை பாகிஸ்தான் அரசாங்கம் மறுக்கிறது.

ஆனால் உண்மைநிலை சரியாகத் தெரியவில்லை. கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெறும் சம்பவங்களை பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரம் என்று ஒதுக்கிவிட்டு உலக மக்கள் சும்மா இருக்கமுடியாது.

தென்னாபிரிக்கா, போர்ச்சுக்கல் மற்றும் பல நாடுகளும் தங்கள் பிரதேசங்களில் நடைபெற்ற நடைபெறும் சம்பவங்கள் ஒவ்வொன்றுக்கும் 'உள்நாட்டு விவகாரம்' என்றுதான் கூறிவந்துள்ளன; கூறி வருகின்றன. ஆனால் இந்தப் பிரச்னைகளில் பிற நாடுகளோ, ஐ. நா. வோ அக்கறை கொள்ளாமலும் தலையிடாமலும் இருந்திருக்கின்றனவா, இருந்திருக்கத்தான் முடியுமா?

பாகிஸ்தானைப் பொறுத்த வரையில் சமீபத்தில் ஜனநாயக ஆட்சியை அமைப்பதற்கு மக்கள் வாக்களித்திருந்தனர். மக்களால் மிகப் பெரும்பான்மைப்பலத்துடன் தெரிவுசெய்து அனுப்பப்பட்ட ஷேக் முஜிபுர் ரஹ்மானின் தலைமையிலான அவாமிலீக் கட்சியை பாகிஸ்தான் அரசு தடைசெய்து அதன் தலைவர்களையும் கைது செய்ய உத்தரவு பிறப்பித்ததும் அங்கு இராணுவ ஆட்சியைப் பிரகடனப்படுத்தியிருப்பதும் பாகிஸ்தானின் மதிப்புக்கு நல்லதல்ல.

நிலைமை மேலும் மோசமாகி பாகிஸ்தான் பிளவுபடாமலிருக்கவேண்டுமானால் கிழக்குப்பாகிஸ்தான் மக்கள் தேர்தலில் அளித்த தீர்ப்பை ஏற்று கிழக்குப்பாகிஸ்தானுக்கு மாகாண சுயாட்சி உரிமை அளிக்கவும் அங்கிருந்து படைகளை வாபஸ் பெறவும் அதிபர் யாஹ்யாகான் முன்வருவதே அரசியல் விவேகம்.

கிழக்குப் பாகிஸ்தானில் அமைதி நிலவுகிறதென்பதையோ அங்கு யாவும் சீராகிவிட்டதென்பதையோ நம்புவது சுலபமல்ல. மனிதாபிமானத்துடன் அங்கு சண்டையை நிறுத்தவும் அமைதியை நிலைநாட்டவும் ஐ. நா. சமரச தூதுக்குழுவொன்றை அனுப்புவது பயனளிக்குமெனநம்பலாம். சைப்பிரசில் இப்படியொரு சம்பவம் ஏற்பட்டபொழுது ஐ. நா. அமைதிப்படை அனுப்பப்பட்டதும் பின்னர் அங்கு நிலைமை சீரானதும் குறிப்பிடத்தக்கது. பாகிஸ்தானில் அமைதியேற்படுத்துவதில் இலங்கை உட்பட அயல்நாடுகளுக்கும் விசேஷ அக்கறை இருக்கவேண்டும். அங்கு அமைதியை நிலைநாட்ட உதவவேண்டியது அயல்நாடுகளின் கடமையும் பொறுப்புமாகும்.



'கலைஅருவி' சஞ்சிகையின் இரண்டாவது இதழின் முதலாவது பிரதியை அதன் ஆசிரியர் நல்லைக்குமரனிடமிருந்து நல்லை ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் பெற்றுக் கொள்ளுகிறார்.

---

"கலையென்பது காலம், தேசம், இடத்தைக் கடந்து வியாபிக்கின்றது. கலையினால்தான் நிலையான இடத்தைப் பெறமுடியும். அதிலும் இசைக்கலைதான் இறைவனின் நெஞ்சை ஈர்த்து அருளை வழங்குவதற்கு வழியமைக்கிறது."

இத்தகைய ஆத்மீகத் தத்துவத்தைப் பிரதிபலிக்கும் கருத்துக்களை எல்லாம் கூறியவர் சென்னை வீணை வித்வான் திரு. எஸ். பாலச்சந்தர்.

வாணி கைக்கொண்ட வீணையை வாசித்து, உலக நாடுகளையே வியக்கவைத்த திரு பாலச்சந்தரைச் சந்தித்து உரையாடுவதற்குக் கடந்த இரு தினங்களுக்கு முன் மருதனாமடம் திரு. சிவப்பிரகாசம்பிள்ளையின் இல்லத்திற்குச் சென்றிருந்தேன்.

செல்வி சிவசக்தி சிவப்பிரகாசபிள்ளையின் நாட்டிய அரங்கேற்றத்துக்கு தலைமை தாங்குவதற்காகத் தமிழகத்திருந்து வருகை தந்தவர் திரு. எஸ் பாலச்சந்தர். நான் காணச்சென்ற பிற்பகலில்தான் பலாலி விமான நிலையத்திலிருந்து வந்திருந்தார் திரு பாலச்சந்தர். களைத்துச் சோர்ந்திருப்பாரே, அவரை எப்படிப் பேட்டி காண்பதென்ற கேள்விக்குறி என் உள்ளத்தில் எழுந்தது. ஆனால் திரு. சிவப்பிரகாசம் 'ஈழநாடு' பத்திரிகை சார்பாக பேட்டி

## பேட்டிக்கட்டுரை:

# கால, தேசத்தைக் கட[...]

# கலைதான் நிலையான இன்[...]

# வீணைவித்துவான் திரு. பால[...]

காணுவதற்கு வந்திருக்கின்றேன் என்பதை அவரிடம் தெரிவித்ததும் தன்னுடைய பிரயாணச் சோர்வையெல்லாம் களைந்து உற்சாகத்துடன் பேட்டிதருவதற்காக வந்தார்.

### பிறந்த ஊர் தஞ்சாவூர்

தென்னகத்திலேயே இசைக் கலைஞர்கள் பலரின் பிறந்தகமாக விளங்கும் தஞ்சாவூரையே தனது பிறந்தகமாகக் கொண்டவர். அந்த நாட்டில் உதித்தவருக்கு இசையென்பது பிறப்புரிமையல்லவா.

இன்முகத்துடன் உரையாடிக்கொண்டிருந்த அவரிடம், உங்களின் வீணை இசையினால் நமது நாட்டினர்தானே உணர்ச்சிவசப்படுகின்றனர். மொழியினை மட்டுமே இந்த உணர்ச்சி ஏற்படுகின்றதா? என்ற வினாவை அவரிடம் விடுத்தேன். இசைக்கு மொழியைக் கடந்த சக்தியுள்ளது என்பதை மேல் நாட்டியான் அவதானிக்கமுடிந்தது இசையின் தன்மை அவர்களை ஆகர்சித்தது என்றார்.

### வீணையைச் சுயமாக கற்றார்

இத்தகைய சக்திவாய்ந்த கலையைக் கொண்டுள்ளீர்களே. உங்களுடைய குருவாக அமைந்தவர் யார்? என்றேன்

"கலையென்பது குருவின் மூலமே வெளிப்படுவது'

மாற்றமுடியாது. [...] மூலம் சிஷ்யன் [...] கொள்வதுதான் மரபு. ஆனால் தெ[...] காலத்தினால் இந்த [...] இசையை யான் சுய[...] சாதனை மூலம் [...] கொண்டேன் என்[...] சொன்னபோது நா[...] சரியத்தில் மூழ்கிவிட[...]

### இலங்கை பற்றி [...]

இலங்கை பற்றி [...] விசாரித்தபோது இ[...] எனக்குப் [...] கைக் கலை[...] பரிச்சியமா[...] டன் நாலா[...] யாக இலங்கைக்கு [...]

பேட்டி கண்டவர்: கு. வி. மகாலிங்கம்

# செல்வி சிவசக்தியின் ஆடல் கண்டேன்

— இ. நாகராஜன் —

"குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற்பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்
பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே"

ஐந்து பொறிகளினூடே மனிதனை ஆட்டிப்படைக்கும் ஆசைகளைக் கடந்து சரியையோகத்தில் நிலைத்த அப்பரடிகள் மனித்த பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தில் என்று ஆராஅன்புடன் கேட்பது இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெறுகின்ற பாக்கியத்தை முற்றற உணர்ந்துள்ளமையாற்றான்.

எடுத்த பொற்பாதம் என்றால் வெறும் பாதத்தை அவர் குறிப்பிடவில்லை. இராகம் பாவம் தாளத்துடன் இசைந்து இறைவன் ஆடிய பரதத்தின் பண்பையும் அதன் இன்பத்தையும் உணர்ந்து மெய்மையில் திளைத்து இவ்வாறு கூறுகிறார்.

பரதநாட்டியத்தை நம் முன்னவர் மதித்தனர். போற்றினர். அந்தப் பண்பாடு இன்றைக்கும் நம்மிடையே நிலைபெற்றுநிற்கின்றதென்பதை நேற்றுமுன் தினம் நடைபெற்ற பரத அரங்கேற்றம் நிரூபித்தது.

நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்துக்கு வெளியே நூற்றுக்கணக்கான கார்கள் கோட்டைமைதானத்தை கபளீகரம் செய்திருந்தன. தோரணங்கள் காற்றிலாட தூய்மையான அலங்காரத்துடன் விளங்கிய வீரசிங்கம் மண்டபத்தை நோக்கி வந்து குழுமியிருந்தோர் [...] சமீபகாலத்தில் காணாத அளவுடைத்தாம்.

காரணம்? செல்வி சிவசக்தி சிவப்பிரகாசபிள்ளையின் பரதநாட்டிய அரங்கேற்றம் மட்டுமல்ல உலகப் புகழ்வீணைவித்துவானும் தென்னிந்தியாவில் புதுமையான படங்களைத்தயாரித்தவரும் சிறந்த நடிகருமான எஸ் பாலச்சந்தரைக்காணுவதற்குமே.

தூய்மையான வெண்மை உடை அலங்காரத்துடன் மேடையிலே தோன்றினார் செல்வி ஆடலிறைக்கு நாட்டிய ஆசிரியர் தீபாராதனை செய்தார். பாரம்பரியமரபையொட்டியகுருவணக்கம், பெற்றோர் வணக்கம் என்பன சம்பிரதாய பூர்வமாக நடைபெற்றன.

இவ்வளவு பிரமாண்டமான கூட்டத்தைச்சேர்த்துவிட்டார்களே செல்வி சிவசக்தியின் ஆட்டம் வந்தோர் உள்ளத்தையெல்லாம் ஆகர்சித்துவிடுமா? என்ற கேள்வி சிலர் நெஞ்சத்தில் ஊசலாடியது

வெள்ளத்தில் பிறப்பின் ஆரம்பத்தில் மீனைப்போல் காட்சியளிக்கினும் தவளைக்குஞ்சு எதிர்காலத்தில் தவளைக்குரிய சக்தியை உள்ளடக்கியிருப்பதைப் போல எதிர்காலத்தில் சிறப்புற்று விளங்குவார் என்பதை செல்வி சிவசக்தியின் ஆட்டம் சுட்டிக்காட்டியது.

தமிழ் நாட்டிலிருந்து அரங்கேற்றத்துக்குத் தலைமை தாங்குவதற்கென்றே விஜயஞ்செய்தவர் திரு. பாலச்சந்தர்.

அவரும் மேடையில் வரும் காலத்தில் செல்வியின் நாட்டியம் சிறப்பாக அமையும் என்பதை எடுத்துக்காட்டினார் என்றால் நாம் இங்கு அதுபற்றிக் கூறுவதில் அர்த்தமில்லை

பொதுவாக கலைஞர்களுக்குரிய பண்பையெல்லாம் ஆளமான ஆங்கிலத்திலும், தனக்கே உரிய தமிழ் பேச்சிலும் விளக்கிய பாலச்சந்தர். உண்மையில் [...]யத்தில் கடுகத்தனையும் கல்மிஷம் கலவாத தூய்மை உடையவர். தனது உரையின்போது இறையோடிணையும் வீணாகானத்தைமேலும் சர்வநாடுகளிலும் மீண்டும் வெளிக்கொணர்ந்து காட்டுவதற்கு கூடியிருந்த சபையினரை ஆசிக்கும்படி கேட்டுப் பணிவுடைமையைப் பட்டவர் த்தனமாகக் காட்டிக் கொண்டார்.

நன்றியுரை வழங்கிய திரு சதா ஸ்ரீனிவாசன் "திரு. பாலச்சந்தரின் வீணா வாத்தியத்தைக் கேட்கச் சந்தர்ப்பம் இல்லாது இந்நாட்டில் வாழ்கின்றோம். கடல்கடந்து எத்தனையோ மைல்களுக்கு அப்பால் அவர் வந்தும் வீணையின் இசை இன்பத்தைத் துய்க்கும் பாக்கியத்தை இழந்துள்ளோம்" என்று நாசுக்காக இன்றைய நிலையையும், கலைஞர்களுக்கும் தெய்விகக் கலைக்கும் கதவடைக்கப்பட்டிருப்பதையும் அம்பலப்படுத்தினார்

அதைப் புரிந்துகொண்டவர்களும் மனதிலே துக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டாமலிருக்கமுடியாது

பாலச்சந்தர் தான் இந்த நாட்டிற்கு விஜயம் செய்ததே வேறு நோக்கமென்றும் வீணை கையிலில்லாது வெளிநாட்டுக்கு முதலாவது பயணம் செய்தது இதுதான் முதற்தடவை என்றும் தெரிவித்தார்.

சுமுகமானசூழ்நிலையில் அரசின் அனுமதியுடன் தான் வீணை இசை பொழிய எதிர்காலத்தில் வருவதாகக் கூறினார்

செல்வி சிவசக்தியைப் பயிற்றிய ஆசிரியர் ஸ்ரீவீரமணி ஐயருக்குப் பாராட்டுத் தெரிவித்த பாலச்சந்தர் அப்போது செல்வியை எதிர்காலத்தில் மேன்மையடையச் செய்யவேண்டிய ஆலோசனைகளை வழங்கினார் சிவப்பிரகாசத்தினருடைய குடும்பத்தவருக்கும் சிவசக்திக்கும் பரிசில்களை வழங்கினார் பாலச்சந்தர்

அலாரிப்புத் தொடங்கி [...]

## பேட்டி கொ[...]

கிறேன் என்று கூறி[...] கும் இலங்கைக்[...] தொடர்[...] வெ[...] திக்கொண்டார்.

### கலைக்கு சுதந்தி[...]

கலைஞர்களுக்குரிய [...] திரம் பற்றி எங்கள் [...] ஷனை திரும்பியபோ[...] எல்லை கடந்து உ[...] யது. கட்டுகளற்[...] வியாபிக்க வேண்[...] கருத்தைத் தெரி[...]

சமுதாயத்துக்குக் [...] தேவை எந்தவாறு [...] றது என்று [...] களுக்குப் [...] கேள்வி [...] போது [...]

---

மங்களம் வரையல[...] நிகழ்ச்சிகள் மாலை [...] மணிக்குத் தொடங்[...] போலவே தெய்வா[...] தரை மணிவரை [...]

இந்த [...] நிக[...] போது [...] மணி [...] இசையில் அமைம[...] சுத்தத்தைப் [...] லும் சொற்கள் [...] வற்றே இருந்தன. [...] பதுக்கு வந்தி[...] எல்லோருக்குமே [...] தெரிந்திருக்க வேண்[...] பதில்லை நடன[...] பாவனைகளைப் [...] சொல்லுவதற்குப் [...] கள் அட்சரசுத்[...] பொருட்பொதிவு[...] படப் [...] மானால் [...] புரிந்துகொ[...] மாகியிருக்கும்.

திரு. பாலச்சந்த[...] பேச்சின்போது [...] அரங்கேற்றத்துக்கு[...] மண்டபம் 'எ[...] சன்' வசதியு[...] அமையவேண்[...] துடன் தான் [...] நேரத்தை இப்ப[...] யற்ற மண்டபத்தி[...] தமை இது வே[...] தடவையென்றும் [...] தார்.

ஒலிபரப்பின் [...] டைச [...] பாலசந்த[...] விளக்கம் [...] பாணம் [...] பாராட்[...] தேவனி[...] ஒலிபரப்பி சரியா[...] யில் ஒத்துழை[...] யென்பதையும் காட்டினார்.

கர்நாடக ச[...] வான் சித்தூர் சுப[...] பிள்ளை, மருத[...] இராமநாதன் கல்[...] பர் திருமதி [...] ஆகியோரும் [...] ஆசீர்வதித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந்து கலை

மதருவது

சந்தர்கருத்து

பட்ட நிலையில் அவர் தெரிவித்தவை.

**பாலச்சந்தர் கருத்துக்கள்**

இன்றைய உலகம் இன்பம் துன்பம் இரண்டையுமே பெறவேண்டியுள்ளது. இன்பத்தினால் கட்டுமீறிய மகிழ்ச்சியும் துன்பத்தினால் மன அலேச்சலும் அடைவது இயற்கை இந்த நிலையைக் கடந்து உள்ளத்தை சசனப் படுத்துவது இந்த இசைச் கலையாகும்.

இந்த அடிப்படையிலேயே என்னுடைய முயற்சியமைந்தது. பல்லாண்டுகளாக்

ந்தவா எஸ், பாலச்சந்தர்

முயற்சித்துவந்தேன். என்னிடத்தில் கைவந்துள்ளது ஏதாவது இருக்குமாயின் அது கலைத்தெய்வம் வழங்கிய பிரசாதம்என்றே கருதுகிறேன்.

இறைவன் கலைவடிவானவன் கலையே அவன். யான் வீணையை மீட்கும் போது உண்மையில் என்னை மறந்து விடுகிறேன் என்னை மறந்த அந்த நிலைதான் இரசிகர்களைக் கவர்வதாக அமைகிறதென்று கருதுகிறேன்.

இவ்வாறு தனது கலை முயற்சி பற்றியும் கலைத்தத்துவத்தை பற்றியும் விளக்கந்தந்த பாலச்சந்தர் தன்னை எந்த வேளையிலும் சந்திக்கலாமென்று கூறி ஒரு விசிற்றிங் காட்டொன்றை என்னிடம் நீட்டினர்,

**புதுமையான விசிற்றிங் காட்**

அந்த விசிற்றிங்காட் உண்மையில் அவரது உள்ளத்தையே பிரதிபலித்தது. அவர் சதா சாதனை செய்து வரும் வீணையை அடக்கியதும் வீணைபோன்ற அவரது கையெழுத்து அமைந்ததுமான அந்த விசிற்றிங் காட் நல்ல சாதி தகட்டில் என்றும் பழுதுபடாத உறுதியுடையதாக அமைக்கப்பட்டிருந்தது.

**24 பட்டங்கள்**

அவர் என்னிடம் கையளித்த அவரது முகவரி அடங்கிய கடிதப் பத்திரமொன்றைக் கவனித்தேன். கலைத்தேவியை உபாஷிக்கும் அவருக்கு 24 பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளமை புலனாகியது.

இத்தகைய பட்டங்கள் இருந்த போதிலும் எள்ளத்தனையும் அவரிடம் இறுமாப்போ, தலைக்கனமோ கடுகத்தனையும் தலைகாட்டவில்லை.

**கலைஞர்களுக்கு ஆசிவழங்கினர்**

கலைஞர்களின் வளர்ச்சிக கலைஞர்களை மதிக்கின்றதிலும் ஊக்குவிப்பதாலும் மேலோங்குகின்ற தென்ற அடிப்படைதான் அவரிடம் விளங்கியது. அங்குவந்த வீரமணிஐயர் திரு.பாலச்சந்தரை வணக்கஞ்செய்த போது அவரை அன்புடன் ஆசீர்வதித்தார். நேற்று முன்தினம் அரங்கேற்றிய செல்வி சிவசக்தியையும் எதிர்காலத்தில் முன்றே முயற்சிக்க வேண்டுமென்று ஆசீர்வதித்தசர்.

ஆசிரியருக்குக் கடிதம்

# தொ. நு. கல்லூரிப் பழைய மாணவரின் சில பிரச்னைகள்

கொக்குவிலில் அமைக்கப் பட்டுள்ள யாழ். கனிட்ட தொழில்நுட்ப நிலையத்தில் கல்வி பயின்ற நூற்றுக்கணக்கான மாணவர்கள் தற்பொழுது கொழும்பில் உள்ள அரசாங்க திணைக்களங்களிலும் தனியார்துறைகளிலும், கூட்டுத்தாபனங்களிலும் கடமைபுரிகின்றனர். கள் இவர்களில் அநேகர் தமிழ்த் தட்டெழுத்தாளர்களாகவும், சுருக்கெழுத்தாளர்களாகவும், எழுதுவினைஞர்களாகவும் கடமைபார்க்கின்றனர். இவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் யாழ்' கனிட்ட தொழில் நுட்ப நிலையத்தில் படித்துக் கொண்டிருக்கும் போதே மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பித்துப் பரீட்சைதன் மூலம் சித்தியடைந்து உத்தியோகத்தில் சேர்ந்திருக்கிறார்கள். முதல் வருட வணிகத் தராதரப்பத்திர வகுப்பில் படித்துவிட்டு இரண்டாம் வருடம் படிக்க முன்னர் வேலை கிடைத்துக் கொழும்புக்கு வந்தவர்கள் அனேகர், இவர்கள் இப்பொழுது தமது வர்த்தக தராதரப் பத்திர வகுப்பைக் கொழும்பில் மருதானையில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் படிக்க முடியாமல் இருக்கிறார்கள். காரணம் மருதானை தொழில் நுட்பக்கல்லூரியில் தமிழ் மொழிமூலம் போதனை இல்லை. ஆங்கிலத்திலும் சிங்களத்திலுமே போதனைகள் உண்டு. வர்த்தகப்பிரிவில் 'டிப்ளோமா' பட்டப் படிப்புகள் கூடச் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் நடத்தப்படுகின்றன. தமிழ் மூலமும் இந்த வகுப்புகள் நடத்தப்பட்டால் யாழ். கனிஷ்ட தொழில்நுட்ப நிலையத்தில் பாதியில் படிப்பை நிறுத்திய மாணவர்களும் தற்போதைய தமிழ் அரசாங்க ஊழியர்களும் பகுதிநேரப் படிப்பை மேற்கொள்ள வசதியாக இருக்கும். இது சம்பந்தமாக எமது பழைய மாணவர் சங்கம் கடந்த இரண்டு வருடங்களாகத் தமிழ் அரசியல் வாதிகளுக்கும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் அதிபருக்கும் கடிதம் எழுதி எவ்வித பயனும் கிடைக்கவில்லை. இரத்மலானையில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில்கூட தமிழில் போதனைமுறை இல்லை. இதனால் தொழில் வகுப்புகளையும் மாணவர்கள் பயிலமுடிவதில்லை தாய்மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ள இவ்வேளையில் தலைநகரில் இத்தகைய தொழிற்கல்விகளுக்குக் கட்டாயம் ஊக்கமும் ஆக்கமும் அளிக்கப் படல் வேண்டும்.

பின்னேரத்தில் மருதானையில் உள்ள தொழில் நுட்பக் கல்லூரியில் வர்த்தக பாடங்களைப் படிப்பதன் மூலம் கணக்கியல், பொருளியல் வணிகமூலம், தட்டெழுத்து போன்ற பாடங்களில் அரசாங்க ஊழியர்கள் தேர்ச்சிபெற முடியும். தற்போது புதிய தமிழ் அரசாங்க ஊழியர்கள் தாம் சேவையில் சேர்ந்த இரண்டு வருடகாலத்துள் தமிழில் தட்டெழுத்துப் பரீட்சையொன்றில் சித்திபெற வேண்டியது அவசியமாகும். தொழில்நுட்பக் கல்லூரியில் தட்டெழுத்துப் படித்தால் இப்பரீட்சையில் சித்தியடைவது சுலபமாகும். அதே போல 'வ இரண்டாந்தர எழுதுவினைஞர் பரீட்சைக்கும் கணக்கியல் முக்கிய பாடமாகும். கணக்கியல் வர்த்தக தராதரப் பத்திர மாணவர்களுக்குப் போதிக்கப்படும் ஒரு பாடம். இதையும் தமிழில் சொல்லிக் கொடுத்தால் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்குப் பரீட்சையில் சித்திகிடைக்க வாய்ப்புண்டு. தனிப்பட்ட முறையில் தமிழ்தெரிந்த போதனாசிரியர்களைத் தேடிப் படிப்பது மிகவும் சிரமம். அதுவும் கொழும்புபோன்ற நகரத்தில் படிப்புக் கட்டணம் அதிகம். தொழில் நுட்பக் கல்லூரியில் அரசாங்கம்இலவசமாகவே போதனையினங்களை நடாத்துகிறது.

இவற்றைவிட, யாழ்ப்பாணத்திலும் வவனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, நயினாதீவு போன்ற பல்வேறு பகுதிகளிலுமிருந்து யாழ். கனிட்டதொழில்நுட்ப நிலையத்தில் கல்விபயின்ற சில மாணவர்கள் இன்னும் நிரந்தரமான வேலைகள் இன்றி இருக்கிறார்கள் இவர்களுக்குப் பொருத்தமான ஸ்தாபனங்களில் உடனடியாக வேலை வழங்கப்பட வேண்டும். தொழிற்பயிற்சி செய்த மாணவர்களை இலங்கைப் போக்குவரத்துச்சபை அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் பயன்படுத்தலாம். பட்டப் படிப்பைவிடத் தொழிற் கல்வி பிரதானமானது. நாட்டின் பொருளாதார விருத்திக்கு உதவுவது ஆதலின், முதலாவதாகத் தொழிற் கல்லூரிகளினின்றும் வெளியேறும் மாணவர்களுக்குக் காலதாமதமின்றிப் பொருத்தமான வேலைகளையும் நல்ல ஊதியத்தையும் வழங்கி நாட்டைக் கைத்தொழில் பொருளாதாரத் துறையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதே ஒவ்வொரு தொழில்நுட்பமாணவரதும் பேராவலாகும்.

க. பேரம்பலம்.
பழைய மாணவர்சங்கச் செயலாளர்.

# 'நலங்கள் கொடுக்கும் திருக்கோயில்'

— ஆர். ரி. சுப்பிரமணியம் —
(அதிபர் குமாரபுரம் வித்தியாலயம்)

(புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோயில் உதசவம் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது. 9-ந் திகதி உற்சவம் முடிவுறும்.)



புளியம் பொக்கணையில அமர்ந்துள்ள புனித சிவாலயமான நாகதம்பிரான் கோயில் ஒல்லாந்தர் ஆட்சியின் ஆரம்ப தசையில் வன்னிய குலதிலகர் நீதிநாயக முதலியாரால் சிவாஞ்சைப்படி தாபிக்கப்பட்டது. புராதன தலவிருட்சமான அரசமரம்இன்றும் வானளாவி வளர்ந்துள்ளது. பரந்தனில் இருந்து 10 மைல் தொலைவில் கண்டாவளைக்கு பால் இவ்வாலயம் உள்ளது.

இயற்கை வளமும் நெற்களனிகளும் வாழையும் கமுகும் பல்கிப்பெருகும் இப்பகுதியின் நாகங்கள் பெருமானை வழிபடும் தலமாக என்றும் நிலவுகின்றது.

தல விருட்சத்தில் வாசஞ் செய்யும்நாகங்களுக்குப் பிரதம பூசகர் உயர்திரு நா. ஐயங்கரப்பிள்ளையார் [வீரகத்திப்பிள்ளையார்] பூசை ஆரம்பிக்கு முன்பே பாலும் பழமும் வழங்குவது பரவசத்தையூட்டும்காட்சியாகும்.

சிவபெருமானைச் சிலமுடன் வணங்கித் தவமியற்றியதன் விளைவாகவே நீதிநாயகமுதலியார் இரண்டு மந்தரையும் 'பின்பம்பப் பிள்ளையுடன் ஒருமையை

வையும் தமதுஉத்தமவாழ்க்கைத் துணைவியார் கமலம்மையார் மூலம் பெற்றனர்.

ஆகவே மேலும் இன்றும் இத்தலத்து- தலவிருட்சமாகிய அரசமரத்தை வலம் வந்து முதிய தம்பதிகள் கூட மக்கட்செல்வத்தை கண்டிருக்கிறார்கள்.

இத்தல விசேடத்தையும் பாம்புகள், பழமும் பாலும் உண்பதையும் பாங்கான பாட்டில் கலைமகள் ஆசிரியர் உயர்திரு கி வா ஜெகந்நாதன் வடித்துள்ளார்.

பாடல் வருமாறு:

இலங்கைத் தீவில் வட
திசையில்
இயங்கும் புளியம் பொக்
கணையில்
நலங்கள் கொடுக்கும்
திருக்கோயில்
நாகத் தம்பி ரானருளால்
வலங்கள் பொலியும்
பாலோடு
கனியும் நாகம் உண்ண
வரும்;
துலங்கும் இந்த அற்பு
தத்தைத்
தொக்கு மக்கள் கண்டிடு
வார்.

'இத்தலத்தில் விஷம் மிக்க நாகங்கள்தமது விஷத்தன்மையை யெல்லாம் அப்புறம் வைத்துவிட்டு ஆலகால விஷத்தை (உலகுய்ய) உண்டருளிய எம்பெருமானைச் சேவிக்கின்றன. ஆகவே நாமும் எமது ஆணவ, கன்மம் மாயை ஆகிய இருள் தரும் விஷங்களை அடக்கி வைத்துவிட்டு புளியம்பொக்கணை நாகேசுவரரைச் சேவிப்போமாக' என சித்தாந்த சாகரம் பண்டிதமணி திரு: சி. கணபதிப்பிள்ளை கூறியிருக்கிறார்.

எங்கள் பெருமான் எழில்
நாக பூஷணங்கள்
தங்கள் பெருமானுக்கு
தானேயாய்- இங்கொருகால்
தோற்றம் எழுத்துத் துளறுத்த செய்தியெல்லாம்
போற்றல் நமக்குப் புகல்.

— பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை

## மகாமாரியம்மன் மகாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வியாழன் ஊர்காவற்றுறை புளியங்கூடல் மகாமாரியம்மன் கோவில் மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 9-ந் திகதி நடைபெறவிருக்கிறது.

## வீதிகளில்கார்விபத்தை தடுக்க.,

உலகில் மோட்டார்கார்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டுவருகிறது. போக்குவரத்து அதிகரிப்பதற்கு ஏற்றாற்போல, விபத்துக்களும் பெருகிவருகின்றன 'கண்ணை மூடிக் கொண்டு' கனவேகத்தில் கார்களை ஓட்டி விபத்துக்குள்ளாகிற கனவான்கள் ஏராளம்; எத்தனையோபேர் தங்கள் இன்னுயிரையும் இழக்கிறார்கள். விபத்துக்களின் பயங்கரத்தைக் குறைக்க, ஏற்கனவே பல சாதனங்கள் இருக்கின்றன. பாதுகாப்பு பெல்டுகள், பாதுகாப்பான ஸ்ரீயரிங்வீல் அதிர்ச்சியைத் தாங்கக்கூடிய 'டாஷ்போர்ட்' வலுவான கண்ணாடி. பத்திரமான பிரேக்முறை, வழிகாட்டுவதற்கு வசதியான சாதனங்கள் என்று எத்தனையோ இருக்கின்றன. இருந்தும், விபத்துக்களின் உயிர்ச்சேதம் ஏற்படுவதைத் தடுக்கமுடியவில்லை.

கூலையில் பாதுகாப்பாகச் செல்லக்கூடியகார் ஒன்றை போக்ஸ்வாகன் தொழிற்சாலை தயாரிக்கும் முறையில் ஈடுபட்டிருக்கின்றது. இவ்வித கார் 2000 ராத்தல் எடை உள்ள மணிக்கு 80 கிலோமீட்டர் வேகத்தில் பாய்ந்து வந்து, ஒரு சுவரில் மோதினாலும், மணிக்கு 110 கிலோ மீட்டர் வேகத்தில் ஒரு மூலையில் திரும்பும்போது தலைகுப்புறக் கவிழ்ந்தாலும் பிரயாணிகளுக்கு பலத்த காயம்எதுவும்ஏற்படாதவகையில்தயாரித்துவருகிறது இந்தக்காரை உருவாக்குவதற்கான ஆராய்ச்சியில் ஏற்கனவே 3 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது-இறுதியில் பாதுகாப்பான கார் உருவானதும் அதனுள் இணைக்கப்படுகிற எல்லா அம்சங்களும் எதிர்காலத்தில்உற்பத்தியாகின்ற கார்களில் இணைக்கப்படும்.

## கலை அருவி

(முத்தமிழ் திங்கள் ஏடு) ஆசிரியர்: 'நல்லைக் குமரன்' கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

'தமிழருவி' என்ற பெயருடனே அனேகமாய் ஓராண்டு ஆரோக்கிய வளர்ச்சி கண்ட புதிய முத்தமிழ் திங்கள் ஏடு 'கலை அருவி' என்று சிறுபெயர் மாறுதலுடன் நவமான அழகுத்தோற்றம் பொலிய பரதகன்னியின் எழிலுருவத்தினைப் புறத்தே தாங்கி வெளிவந்திருக்கிறது புதுவாழ்வுயில் ஆ. செ. மு பண்டிதர் பஞ்சாட்சர சர்மா, சொக்கன் ஆகிய பழைய மறுமலர்ச்சிக் கோஷ்டி எழுத்தாளர்கள் உட்பட பலர் எழுதியிருக்கிறார்கள். எழுதோவியங்களுடனே அருவி கலகலவெனப் புதுவேகத்துடனே பாய்ந்து செல்கிறது. மாவை ஸ்ரீ சரி நாராயண சர்மா எருவில் மூர்த்தி, கோப்பாய் சிவம், நல்லைக் குமரன் ஆகியோரின் பாடல்கள் ஸ்ரீ டி. கே. சீதாராம சாஸ்திரிகள உணர்த்தும் தியாகப் பிரம்மத்தின் கீதப்பொருள், ஈழத்துப் பெண் எழுத்தாளர்கள பற்றியதொரு மதிப்பெறப்புக் கட்டுரை தவில் வித்துவான் கணேசன் நாதஸ்வர வித்துவான் பி. எஸ். ஆறுமுகம் பிள்ளை ஆகியோரின் நிழலுருவப்படங்கள் எல்லாமே அருவி பாயும் நெடுவழியை ஜீவபூமியாக்கி நிற்பன.

-'வேல்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைகளைப் பெற

# சுருட்டுத் தொழிலாளர் ஒன்றுபட வேண்டும்'

மாவிட்டபுரம், புதன்

"சுருட்டுத் தொழிலாளர்கள் தமது உரிமைகளை நிலைநாட்டி சுதந்திரமாக வாழ வேண்டுமானால் சகல சுருட்டுத் தொழிலாளர்களும் இணைந்து உரிமைப் போராட்டத்தை நடாத்தவேண்டும்"

இவ்வாறு குரும்பசிட்டி இராமமுன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடந்த சுருட்டுத்தொழிலாளர்களின் விசேட கூட்டமொன்றில் பேசுகையில் உடுவில் கிராம சபைத்தலைவர் திரு. எஸ். முத்துலிங்கம் கூறினார்

சுருட்டுத் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகை பற்றி ஆராய நடாத்தப்பட்ட இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் சுருட்டுத்தொழிலாளரின் சம்பளம் உட்பட சகல பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டியவையாகும் ஆகவே சுருட்டுத் தொழிலாளர்கள்சேர்ந்து சம்பளம் உட்பட சகல பிரச்சினைகளையும் தீர்க்கமுதலாளிகளுக்கு எதிராக போராட்டம் நடாத்தவேண்டும் அப்போதுதான் உரிமைகளை நிலைநாட்டமுடியும் என்றார்

திரு எஸ். மார்க்கண்டு பேசுகையில் சுருட்டுத்தொழிலாளர் தனித்துநின்றோ, அல்லது பலம் அற்ற சங்கங்களில் நின்றோ உரிமையைப் பெற முடியாது. சகலரும் ஒரே ரீதியில் செயலாற்ற வேண்டும் என்றார்.

மற்றும் எம். ஆலாலசுந்தரம், ரீ சிவஞானம் எஸ் தெய்வேந்திரன் உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

......

நல்லூர்

ஸ்ரீதியாகராஜ உற்சவ

## இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வியா.

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தியாகராஜ உற்சவத்தின் இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு!

பிற்பகல் 6 30—7-30 பாட்டு பொன் புஷ்பரத்தினம், 7-15 7-55 பாட்டு: திருமதி மோகனாம்பிகை கணேசன். 2-00 8-45 வீணை செல்வி திவ்வியரஞ்சனி பேரம்பலம், 8-45— 9-25 பாட்டு திருமதி சரஸ்வதி பாக்கியராசா, 9-30— 10-10 பாட்டு ராம் குமாரசாமி.

பக்கவாத்தியம் வயலின் எஸ். வைத்தீஸ்வரஐயர். ஜி சண்முகானந்தம், மிருதங்கம் வி அம்பலவாணர், ஏ சந்தானகிருஷ்ணன்.

# சிறுகைத் தொழிலாளருக்கு கூ.மொ.வி. உதவி

கோட்டை, புதன்

சிறுகைத்தொழில்களில் ஈடுபடும் சிறுகைத்தொழிலாளர்களுக்குக் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் உதவி செய்வதற்கு ஒரு திட்டத்தைவகுக்கிறது.

சிறுகைத்தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் கைப்பைகள். பட்டிக் துணிகள், பன்னச்சேலைகள்' படுக்கை விரிப்புகள், பாய்கள், போன்றஇன்னோரன்ன பல பொருட்களை பெற்றுத் தனது கிளைகள் மூலம் கூ. மொ. வி ஸ்தாபனம் விநியோகிக்கவுள்ளது.

தற்போது லங்கா சலுசலாவே மேற்படி பொருட்களை வாங்கி விநியோகிக்கிறது.

......

# கொல்வின் பயணம்

கோட்டை, வியாழன்

ரோமில் ஏப்ரல் 5-ம்திகதி தொடக்கம் 8-ம்திகதி வரை நடைபெறஇருக்கும் தேயிலை பற்றிய கருத்தரங்கில்பங்குபற்ற தோட்டத்தொழில் அமைச்சர் திரு. கொல்வின் ஆர். டி. சில்வா நேற்றுப் பயணமானார்.

இக்கருத்தரங்கில் கிழக்கு ஆபிரிக்கா உட்பட ஏனைய தேயிலை செய்கை பண்ணும் நாடுகளுடன் இலங்கை இணைந்து இயங்குவதா? இல்லையா? என்பதுகுறித்தும் ஆலோசிக்கப்படும்.

# ஐ. அ. குடியரசின் எதார்த்த நிலை பற்றி "பிராவ்டா"


மாஸ்கோ, மார்ச் 31

'போர் நிறுத்தத்திற்கு இணங்கியதுமூலமும் 1967 நவம்பர் 22-ம் திகதி ஐ. நா. பாதுகாப்புச் சபைத் தீர்மானத்தை அமுல் நடத்தும் நோக்குடன் ஜாரிங் தூதுக்குழு மீண்டும் பணியாற்றிய வாய்ப்பு அளித்ததன் மூலமும், மத்திய கிழக்கு நெருக்கடிக்கு அரசியல் தீர்வு காண்பதற்குக் கெய்ரோ ஒரு சிறந்த முன் முயற்சியை எடுத்துள்ளது என்று பிராவ்டாவின் நிருபர் யூரி தனுகோவ் எழுதியுள்ளார்.

மேலும் 'ஐக்கிய அரபுக் குடியரசு திட்டவட்டமாகவும், தொடர்ந்தும், சமாதானத் தீர்வுக்கு முயலுகிறது. உதாரணமாக, எகிப்திய அரசு ஜனவரி மாதத்தில் ஆக்கபூர்வமான சமாதானப் பிரேரணைகளைவெளியிட்டது. பெப்ரவரி மாதத்தில், சூயஸ் கால்வாயின் கிழக்குப் பகுதியிலிருந்து இஸ்ரேல் தனது படைகளின் ஒரு பகுதியை வாபஸ் வாங்கத் தொடங்கினால் சூயஸ் கால்வாயிலுள்ள தடைகளை எகிப்து உடனே அகற்றுமென்றும், சர்வதேச கப்பல் போக்குவரத்துக்குச் சூயஸ் கால்வாய் திறக்கப்படும் என்றும் எகிப்திய அரசு கூறியது. சமாதானத் தீர்வு சம்பந்தமான கேந்திரப் பிரச்சினைகள் மீது இரு சாராரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய திட்டவட்டமான பொறுப்புகள் குறித்து நாரிங் தூதுக்குழு கேட்ட கேள்விகளுக்கு எவ்விதத் தாமதமும் இன்றி ஆக்கபூர்வமான விடைகளை கெய்ரோ அளித்தது

சமாதானத் தீர்வுக்கான முயற்சி எடுப்பதில் எகிப்தியத் தலைவர்கள் உயர்ந்தபட்ச அந்தரங்க சுத்தியைக் காட்டியுள்ளார். ஆனால் இஸ்ரேலியத் தலைவர்கள் கடந்த மூன்றரையாண்டுகளில் எவ்வித ஆக்கபூர்வமான பிரேரணைகளையும் முன்வைக்கவில்லை

'இஸ்ரேலின் நிலை இவ்வாறு இருந்த போதிலும் ஐக்கிய அரபுக் குடியரசு ஏமாற்றத்திற்கு இடமளிக்கவில்லை; அரசியல் தீர்வுக்கான தனது முயற்சிகளை நிறுத்தவில்லை. ஐக்கிய அரபுக் குடியரசின் சமாதான நிலையானது தற்காலகமானதல்ல. அது எகிப்தின முற்போக்கு ஆட்சியின் அடிப்படையாக உள்ளது. எகிப்திய மக்களின் ஆக்கபூர்வமான உழைப்பிலிருந்தும், புதிய வாழ்வுக்கான நிர்மாணத்திலிருந்தும் அது தோன்றியுள்ளது' என்று அவர் மேலும் கூறுகிறார்.




## செய்திச் சுருக்கம்

### 46 வயதுக்கு பின் சொந்த ஊருக்கு இடமாற்றம்

கல்வியமைச்சு 46 வயது பூர்த்தியான சகல ஆசிரியர்களையும் அவர்களதுசொந்த ஊருக்குஇடமாற்றம்செய்ய தீர்மானித்துள்ளது.

இவர்களின் இடமாற்றத்திற்கான கடிதங்கள் மே மாதம் 3-ம், 15-ம் திகதிகளில் கிடைக்கலாம் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இத்துடன் கஷ்டமான இடங்களில் தொடர்ந்து 4 வருடங்கள் கடமையாற்றியவர்களுக்கும் கஷ்டமற்ற வசதியான இடங்களில் கடமையாற்றஇடமாற்றம்செய்யப்படவிருக்கிறது.

0 0 0

### ஓய்வு பெறுவார்

அரசாங்க சேவையில் இருந்து திறைசேரிச்செயலாளர் திரு. எம். இராஜேந்திரா ஓய்வுபெறுகிறார் ஓய்வுபெறுவதற்கான பத்திரங்களை நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவிடம் ஏற்கனவே திரு. இராஜேந்திரா சமர்ப்பித்துவிட்டதாகத் தெரிகிறது. இவர் 1934-ம் ஆண்டு அரசாங்க சேவையில் சேர்ந்தார்.என்பது குறிப்பிடத்தக்கது.

0 0 0

### பொலிசாருக்கு நஷ்டஈடு

1948-ம் ஆண்டில் இருந்து இதுவரை காலமும் கடமையாற்றும் நேரத்தில் மரணமாகியோ அல்லது உறுப்புகளை இழந்தோ அல்லபடும் பொலிசாரதுகுடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதென பத்திரிசபை தனது சமீபத்திய கூட்டத்தில் தீர்மானித்துள்ளது. பொலிஸ் சட்டத்தின் 28-ஏ பிரிவின் கீழ் மேற்படி முடிவை அரசாங்கம் எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

0 0 0

### போககுவரத்து சட்டத்தை மீறிய 2182 பேர் மேல் வழக்கு

சாரதிகள், பிரயாணிகள் உட்பட 2182 பேர் மேல் பொலிசார் மோட்டார் போக்குவரத்துச்சட்டத்தை மீறியதற்காக வழக்குத் தொடரவுள்ளனர். இத்தகவலை பொலிஸ் தலைமைக்காரியாலய போக்குவரத்துப் பகுதி அதிபர் திரு. எஸ். எஸ் ஜயதிலகாதெரிவித்துள்ளார் மேற்படி தொகையினரில் மிதிபலகையில் மட்டும் பிரயாணம் செய்தவர்கள் 1234 பேர் எனக் கூறப்படுகிறது.

0 0 0

### 375 பேர் கைதுசெய்யப்பட்டனர்

அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்டது. முதல் இதுவரை நாசவேலைகளில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் 375 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். என திங்கட்கிழமையன்று தகவல் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

———

### சுகாதாரப் படக்காட்சி

மாவிட்டபுரம், புதன்

குப்பிளான் பகுதி மக்களிடையே சுகாதாரத்தையும் குடும்பக்கட்டுப்பாட்டையும் பரப்பும் நோக்குடன் சுகாதார குடும்பக்கட்டுப்பாடு படக்காட்சிகள் குப்பிளானில் நடாத்தப்படுகின்றன.

சுகாதாரப் பகுதியின் ஆதரவில் நிகழும் இப்படக்காட்சி குப்பிளான் கற்கரை விநாயகர் ஆலய முன்றலிலும். விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்திலும் காண்பிக்கப்பட்டது.

......

### விஜயம்

பண்டாரவளை, புதன்

ஸ்ரீசிவபாலயோகி மகராஜ் பண்டாரவளை ஸ்ரீவருணானந்த ஆச்சிரமத்திற்குவருகை தந்தார். சுவாமிஜியின் பாதம் பட்டதனால் தமது ஊர் புனிதமடைந்ததென மக்கள் உவகைகொண்டு அவரை வங்கிண ஆசிபெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். கூ. பயிற்சிககலாசாலை

# இறுதிப் பரீட்சையில் சித்தி பெற்றோர்

மாவிட்டபுரம், புதன் யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலை மாணவர்களின் சாதாரண பிரிவு, கனிஷ்ட பிரிவுப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

சாதாரண பிரிவு முடிவுகள் நேற்று வெளியாகியிருந்தன. மிகுதி முடிவுகள் பின்வருமாறு:

சாதாரண பிரிவு: நூன சித்தி: என். சண்முகநாதன், பி ஆனந்தநடராசா, ஜி துரைசிங்கம், பி கனரத்தினம்.

3 மாதக் கனிஷ்ட பிரிவு சித்தியடைந்தோர்: பி பாக்கியராசா, ஆர் வரதராசன், கே சற்குணநாதன், எஸ் மனோகரன், எல் மதுரநாயகம், எஸ் சிவப்பிரகாசம், ரி சிவயோகநாதன், எஸ் நடராசா, வி சிவச்செல்வராசா, கே சிவசேகரம், பி திரவியம், என் லக்ஷ்மணதாஸ், ஆ சிவகுருநாதன்.

நூன சித்தி: திரு கே திருஞானசம்பந்தன், பி பாலசுப்பிரமணியம், பி ஜேசுநாயகம், வி பஞ்சாட்சரம், எம் கணேஸ்வரன், பி யோகநாதன், எம் பாலேந்திரன்.

சித்தியடைந்தோர்: கே சிவஞானம், எஸ் சண்முகம், எம் சிவகுலம்.

## களஞ்சியங்கள் கையளிப்பு

கோட்டை. வியாழன் காணி, விவசாய அமைச்சு திருவ திட்டமிட்டுள்ள 80 நெற்களஞ்சியங்களில் 48 நெற்களஞ்சியங்களை இன்று பூர்த்தியாக்கி வீடமைப்பு நிர்மான அமைச்சு காணி அமைச்சிடம் கையளித்துள்ளது.

கிராமப் பகுதிகளிலுள்ள சுமார் 5,000 பேருக்கு மேற்படி களஞ்சிய நிர்மான வேலைகளில் வேலைவாய்ப்பளிக்கப்பட்டது. குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக இக்களஞ்சியங்களை நிறுவிமுடிக்க உதவி செய்த தொழிலாளர்களுக்கு நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்குவதென வீடமைப்பு அமைச்சு முடிவுசெய்துள்ளது.

## சுதந்திரக்கட்சிக் கிளை நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வியா. ஏழாலை வடக்கு, கிழக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சிக் கிளை நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: தா. கந்தையா, உபதலைவர்: ஆ. தர்மலிங்கம் செயலாளர்: சி. சத்தியநேசன், உபசெயலாளர்; த சிவஞானசம்பந்தர், தனாதிகாரி: த. சிவஞானசுந்தரம். மு. நவரத்தினம், வ. பொன்னுச்சாமி, த. பாலசுப்பிரமணியம், க. தேவமனோகரன் ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## நாளை மேடை ஏறும் 4 நாடகங்கள்

தெல்லிப்பழை, வியா. கட்டுவன் தெற்கு பாரதி சன சமூக நிலையத்தினரால் நாளை வெள்ளிக்கிழமை மாலை ஒரே மேடையில் நாடக நடன நிகழ்ச்சிகள் நடாத்தப்படவுள்ளன. பாரதி சன சமூகநிலைய முன்றலில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்ச்சிகளுக்கு திரு. மூ தருமமூர்த்தி தலைமைவகிப்பார். மயிலிட்டி கிராம சபைத் தலைவர் திரு. கு தி இராஜதுரை பிரதம விருந்தினராகக் கலந்துஉரையாற்றுவார்.

இலங்கையர்கோன் மன்றத்தினரின் 'இயமன்', தெல்லியூர் மன்றத்தினரின் 'இருஜீவன்கள் ஆகிய சமூக நாடகங்களும். கலைப்புரடக்ஷன்ஸாரின் 'அப்பலோ ஆறுமுகம்', 'சோக்கல்லோ' ஆகிய நகைச்சுவை நாடகங்களும் இடம்பெறவுள்ளன.

......

## லண்டன் செல்வார்

மாவிட்டபுரம், புதன் காங்கேசன்துறை சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் சார்பில் தொழிற் சங்க வாதியான திரு. சோமசிறி முதியான்சலாகே என்பவரை லண்டனில் தொழிற் சங்கப் பயிற்சிக்கு அனுப்புவதற்குப் பிரஸ்தாப சங்கம் முடிவுசெய்துள்ளது. 500க்கு மேற்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட தொழிற் சங்கங்களிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதியை லண்டனுக்கு அனுப்பித் தொழிற்சங்கப் பயிற்சி அளிக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதன்படி திரு. சோமசிறி அரசாங்கச் செலவில் லண்டனில் தொழிற்சங்கப் பயிற்சி பெற்றுத் திரும்புவார்

## 'சகல பரீட்சைகளையும் அரசாங்கமே நடத்த வேண்டும்''

அரியாலை, புதன் நல்லூர்த் தொகுதியின் ஸ்ரீலங்கா ஜாதிக குரு சங்கக் கிளை, யாழ்ப்பாணம் செட்டித்தெரு எம். எம். பாடசாலை மண்டபத்தில் வடபகுதி ஜாதிக குரு சங்கத்தலைவர் திரு. வி கிருஷ்ண பிள்ளையின் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. கிளைச் சங்கத்தின் நிர்வாகிகளாகிகள் பின்வருமாறு: தலைவர்: திரு பீ. சிவஞானசுந்தரம், செயலாளர்: திரு வை கனகசபாபதி, தனாதிகாரி: திரு: எஸ். நவரத்தினம் 9 பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

இலங்கையில் நடக்கும் பரீட்சைகள் அனைத்தும் இனிமேல் இலங்கை அரசாங்கத்தினால் நடத்தப்பட வேண்டுமென அமைச்சரைக் கோரும் தீர்மானம் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

......

## சந்நியாசம் பெற்றார்

திருக்கோணமலை, புதன் திருக்கோணமலை சிவயோக சமாஜயோகாச்சிரமத்தைச் சேர்ந்த தொண்டர் திரு: கந்தையா அடையாறு ஸ்ரீராம்நகர் யோக சமாஜ ஸ்தாபகர் கவியோகி சுத்தானந்தரிடம் சந்நியாசம் பெற்று சுவாமி சிவயோகானந்தா என்னும் நாமம் பூண்டுள்ளார். இவர் திருமலை ஆண்டான் குளத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிவயோக சமாஜ ஆஸ்ரமத்தில் தமது சந்நியாச வாழ்வைத் தொடர்வார்.

......

உத்தரபிரதேச

## அரசமைக்குமாறு கமலாபதிக்கு அழைப்பு

புதுடில்லி, மார்ச் 31 உத்தரப்பிரதேசத்தில் டி என் சிங் தலைமையிலான சம்யுக்த விடாயக்கல் அரசு தோல்வியடைந்ததைத் தொடர்ந்து டி: என். சிங் ராஜினமாச் செய்ததைத் தொடர்ந்து சஞ்சிவையா காங்கிரஸின் உத்தரப் பிரதேசத் தலைவர் கமலாபதி திருவாட்டியை அரசு அமைக்குமாறு கவர்னர் கேட்டுக் கொண்டுள்ளார்

மேற்கு வங்காள அரசை அமைக்குமாறு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அஜாய் முகர்ஜியை கவர்னர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## அணு சக்தியால் இயங்கும் கடிகாரம்

மொஸ்கோ, மார்ச் 31 சோவியத் யூனியனில் பௌதிக, றேடியோ தொழில் நுட்ப அளவுகளின் அகில யூனியன் ஆராய்ச்சிக் கூடத்தில் அணு சக்தியால் இயங்கும் கடிகாரம் இருக்கிறது.

நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகள் என். பசோவும், ஏ. புரகரோவும் முதல் அணுசக்திக் கடிகாரத்தை உருவாக்கினர்.


# ஈழம் செல்வம் செழிக்க லங்கெம் இரசாயனங்களைப் பாவியுங்கள்!

விவசாயிகளே! பொன்யுகத்தின் முன்னோடிகளாய், நம் நாட்டில் செல்வம் செழிக்க, வெங்காயமும், மிளகாயும் பயிரிடுக.
அறுவடை நன்கு பெற...அனைவரும் செல்வம் பெற...முதலடி இன்றே எடுங்கள்!

உங்கள் வெங்காய, மிளகாய்ச் செடிகளைத் தாக்கும் பூச்சி, புழுக்களையும், களையையும் அழிக்க, இலங்கையில் லங்கெம் ஸ்தாபனம் ஒன்று மட்டுமே களைக்கொல்லி, புழுப்பூச்சிக்கொல்லி ஆகியனவற்றையும், செடிவளர குரோ-மோ உரத்தையும் முழுமையாக அளிக்கிறார்கள்.

அசொட்ரீன் 60, சுமித்தியன், பிளனவின், மில்ட்ரெக்ஸ், குரோ-மோ உரம், டீ.டீ. நிலப் புகைப்படுத்தி ஆகியன லங்கெம் உற்பத்திகள். வெங்காயத்திற்கும், மிளகாய்க்கும் உகந்ததாக இவை தயாரிக்கப்படுகின்றன. ஈழம் செல்வம் செழிக்க, கூடிய வெங்காயமும், மிளகாயும் நாட்டுக!




குரோ-மோர் உரம் மில்ட்ரெக்ஸ் அசொட்ரீன் 60 டீ.டீ. நிலப் புகைப்படுத்தி சுமித்தியன் பிளனவின் குரோ-மோ உரம்

லங்கெம் இலங்கை லிமிட்டெட் ... த.பெ. எண் 919 கொழும்பு டெலி. 28333


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உங்கள் பிள்ளைகளுக்கு நாட்டுப்பற்று ஊட்டுங்கள்"

## பெற்றோருக்கு பிரதமர் வேண்டுகோள்

கோட்டை, புதன்

சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்து அதன்படி நடப்பதை விடுத்து வன்முறைச் செயல்களில் இளைஞர்கள் இறங்கியுள்ளார்கள் எனப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

கொள்ளுப்பிட்டி சென்ற் தோமஸ் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதமர் மேற்கண்டவாறு பெற்றோர்களுக்குக் கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இத்தகைய வன்செயல்களைக் கண்டிப்பதோடு அவற்றில் ஈடுபடுபவர்களையும் தண்டிக்கவேண்டும் பெற்றோராகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளின் கல்வியும் ஒழுக்கமும் ஆசிரியர்களில்தான் தங்கியுள்ளது என நினைத்து ஆசிரியர்களுக்கு அவற்றைவிட்டுவிடுதல் கூடாது. எனவே நீங்கள் உங்கள் பிள்ளைகளின் ஒழுக்கத்திலும் கல்வியிலும் கூடிய அக்கறை காட்டுவதோடு அவர்களை வீட்டுப் பற்றும் நாட்டுப்பற்றும் உள்ளவர்களாக சட்டத்தையும் ஒழுங்கையும் மதிப்பவர்களாகச் செய்யவேண்டும்.

இன்று இந்நாட்டு இளைஞர்கள் அமைதியற்றவர்களாக சட்டத்தையும் ஒழுங்கையும் பாதிக்காது செயல்படுகிறார்கள். இதை யிட்டு பெற்றோர்கள் மனம் வருந்தவேண்டும்.

# கவியோகி 4-ம் திகதி ஈழம் வருகிறார்

யாழ்ப்பாணம், வியாழன்

புதுவை யோகசமாஜத்தின் ஸ்தாபகர் கவியோகி சுத்தானந்தர் ஏப்ரல் 4-ம்திகதி இலங்கை வருகிறார் இலங்கையில் ஒரு மாதகாலம் தங்கி கொழும்பு, திருக்கோணமலை, யாழ்ப்பாணம், மலைநாடு ஆகிய இடங்களில் சுவாமிகள் ஆத்மீகச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார். இவருடன் திருமலை சிவயோக சமாஜத்தைச் சேர்ந்த சுவாமிசிவயோகானந்தரும் வருவார்.

# ஏப்ரல் தொடக்கம் கப்பல் தீர்வை குறைக்கப்படும்

கோட்டை, புதன்

லண்டனிலிருந்து பொருள்களை இலங்கைக்கு ஏற்றி, வரும் கப்பல் பொருட்களைக் கொண்டுசேர்க்கும் கப்பல் ஆகியவற்றின் கப்பல் கட்டணத்தீர்வை நாளையிலிருந்து குறைக்கப்படுமென கப்பல் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையிலிருந்து கொண்டுசெல்லும்பொருட்களின் தீர்வை அந்தருக்கு 10 சிலிங் வீதமும் இங்கு கொண்டுவரப்படும் பொருட்களுக்கு 25 லிருந்து 15 சதவீதமாகவும் குறைக்கப்படுமெனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அண்மையில் கப்பல்கட்டண உயர்வை பிரிட்டிஷ் கப்பல்கம்பனிகள் அதிகரித்ததைத் தொடர்ந்து, சிங்கப்பூரில் நடைபெற்ற சாம்ராஜ்ய மகாநாட்டின் பொழுதுபிரிட்டிஷ் பிரதமர் திரு. எட்வாட் ஹீத்துடன் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இதுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்தி, கப்பல் கட்டணத்தைக் குறைக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து கப்பல்போக்குவரத்து நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கொழும்பில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். பின்பு மார்ச் மாதம் 26-ம் திகதி லண்டனில கப்கம்பனி நிறுவனப் பிரதிநிதிகளுடன் இலங்கையிலிருந்து சென்ற தூதுகோஷ்டிபேச்சுவார்த்தை நடத்தியது இந்தப்பேச்சு வார்த்தையில் லண்டனிலுள்ள இலங்கை ஹைகமிஷனரும் துறைமுகச் சரக்குகூட்டுத்தாபனத் தலைவரும் கலந்துகொண்டனர்.

## சமாதானத்தை...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

ளுக்குப் பயிற்சி அளிப்பதையும் நிறுத்த வேண்டுமென அமெரிக்கப் பத்திரிகையான நியுயோர்க் ரைம்ஸ் எழுதியுள்ளது.

### தமிழ்நாடு மாணவர் ஆதரவு

கிழக்கு பாகிஸ்தான் மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் தீர்மானத்தை தமிழ்நாடு மாணவர்சம்மேளனம் நிறைவேற்றியுள்ளது. மதுரையில் நடைபெற்றஇக்கூட்டத்தில் வங்காள மக்களின் விடுதலைக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

## கி. பாகிஸ்தான்...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

ஏழரைக்கோடி மக்களின் வீரம்மிக்க எழுச்சி வெற்றி பெறுமென நம்புகிறோம். அவர்களின் துன்பங்களுக்கு எமது அனுதாபத்தையும் முழுமனதுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். கடந்த டிசம்பர் மாதத்தில் கிழக்கு வங்காள மக்கள் தங்கள் தீர்ப்பை ஜனநாயக ரீதியில் மிகத் தெளிவாகத் தெரிவித்தபோதிலும் அதனை பாகிஸ்தான் அரசு புறக்கணித்து. இவ்வித செயல்களில் ஈடுபடுவது வருந்தத்திற்குரியது.

பாகிஸ்தானுடன் நல்லெண்ணத்தையும் உறவையும் எப்பொழுதும் விரும்பியே இந்தியா நடந்துவந்திருக்கிறது. அப்படி இருந்தபொழுதிலும் எமது அண்டையிலுள்ள ஒரு பகுதியில் கொடுமை மிகுந்த நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருப்பதை அறிந்தும் பாராமுகமாய் இருக்கமுடியாது. எனவே கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் படுகொலை செய்யப்படுவதை உடனடியாக நிறுத்தி [illegible] ஏற்பட உலகநாடுகள் [illegible] புரியவேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது

# டைனமைட் வழக்கு

யாழ்ப்பாணம், வியாழன்

டைனமைட் வழக்கு நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. சொல்வின மென்டிஸ் முன்னிலையில்விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ் வழக்கில், யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த தவலிங்கம் என்பவர், டைனமைட்டினால் கட்டடத்துக்கு சேதம் விளைவிக்க முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது எதிரி சார்பில் அட்வகேட் ஏ. அமிர்தலிங்கம், புறக்டர் வி. ஏ. ஈ. பாலசிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானார் மாஜிஸ்திரேட் விசாரணையை ஏப்ரல் 15ம் தேதிவரை ஒத்திவைத்தார்.

......

# இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில்11-ம் திருவிழாவாகிய இன்று மாலை 6—7-30 மணிவரை திருப்பூங்குடி வி. க. ஆறுமுகம் அவர்களால் "குண்டோதரனுக்கு அன்னம்" என்னும் பொருள்பற்றி கதாபிரசங்கமும் இரவு 8-30—9-30 மணிவரை திரு ரி. வி. சுப்பிரமணியம் அவர்களின் இன்னிசைக்கச்சேரியும் நிகழும்.

......

# 12-ம் திகதி உறுதிப்படுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், வியா.

யாழ் மேயர் திரு. ரி எஸ் துரைராசாமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டதை உறுதிப்படுத்துவதுபற்றி ஆலோசிக்குமுகமாக இம் மாதம் 12-ம் திகதி சபையின் விசேட கூட்டத்தை யாழ் மாநகராட்சிமன்ற ஆணையாளர் திரு ஏ. ரி. சுந்தரம் கூட்டுகிறார்.

கடந்த 28-ம் திகதி நடைபெற்ற சபையின் விசேட கூட்டத்தில் மேயர் திரு துரைராசாமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றபட்டது தெரிந்ததே.

......

# குஜராத் முதல்வர் ராஜினமா

புதுடில்லி, மார்ச்.31

குஜராத் முதலமைச்சர் ஹிதேந்திரதேசாய் ராஜினமாச் செய்துள்ளார்.

நிஜலிங்கப்பா காங்கிரசைச் சேர்ந்த திரு ஆர். பி. பார்த்தசாரதி எம் பி. அந்தக் கட்சியிலிருந்து ராஜினமாச் செய்துவிட்டார்.

கடந்த பொதுத்தேர்தலில் மக்கள் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கே தமது ஆதரவைத் தெரிவித்திருப்பதால் தாமும் இந்திரா காங்கிரஸ் கட்சியில் சேரப்போவதாக அவர் அறிவித்திருக்கிறார்.

......

# சேமமடு கொலை வழக்கு

## 3-ம் திகதி தீர்ப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

சேமமடுக் கொலை வழக்கில் எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வக்கேட் கே. வி. எஸ். சண்முகநாதன், முடிக்குரிய வழக்கறிஞர் அட்வக்கேட் சந்திரசேகரா ஆகியோர் தொகுப்புரை நிகழ்த்தினார்கள். ஏப்ரல் 3-ந் திகதி நீதியரசர் முடிவுரை நிகழ்த்துவார். அதைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்படும்.

இவ்வழக்கில் 1969-ம் ஆண்டு மே மாதம் 15-ந் திகதி சேமமடுவில் நட[illegible] [illegible] கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

# வீணைவித்துவான் பாலச்சந்தருக்கு 25-வது பட்டம்

யாழ்ப்பாணம் வியா

நான் பூர்வ ஜன்மத்தில் செய்த பாக்கியம்போலும் இன்று 25வது பட்டத்தை நல்லூரில் பெறுகின்றேன், முன்பு பெற்ற பட்டங்கள் எல்லாம் நிறைவு பெறும் வகையில் இது வெள்ளிவிழாவாகவே அமைந்துவிட்டது. யாழ் வடஇலங்கை சங்கீத சபையாருக்கு மனப்பூர்வமான நன்றி கூறுகிறேன்

இவ்வாறு பிரபலதென் இந்திய வீணைவித்துவானும் படடைரக்டருமான திரு எஸ். பாலச்சந்தர் கூறினார்.

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் வட இலங்கைச் சங்கீத சபையின் ஆதரவில் நடைபெறும், ஸ்ரீ தியாகராஜ இசை விழாவில்வீணவாத்திய வித்தியாதரன் என்ற பட்டமளிக்கப்பட்ட பொழுதே மேற்கண்டவாறு கூறினர்

தொடர்ந்து திரு பலச்சந்தர் பேசியதாவது, சங்கீதக் கலைக்கு அழகு கம்பீரம் நெட்டை குட்டை என்று இல்லை.

எத்தனையோ பேர்கள் கண்ணை இழந்திருந்தும் சங்கீதக்கலையுடன் ஐக்கியப்பட்டுள்ளார்கள்

திருவாளர்கள் கே சரவணபவானந்தன் ராமகுமாரசாமியுட்படப் பலர் பாலச்சந்தரைப் பாராட்டிப் பேசினார்கள்.

கலையரசு சொர்ணலிங்கம் புத்தகம் ஒன்றும்கொடுத்துப் பாராட்டினர். திருபாம்பு தில்லைராஜா வரவேற்புரை நிகழ்த்தினர் இசைக்குருசில் எஸ். செல்லத்துரை பாராட்டித்தலைமைப்பாடி அளித்தார்.

(கு வி. ம)

## சிவபால யோகி

யாழ்ப்பாணம், வியாழன்

இன்று மாலை 6மணிக்கு ஸ்ரீவபால யோகி மகராஜ் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்குவார் அங்கிருந்து நல்லூர் சட்டநாத கோவில் அருகாமையிலுள்ள யாழ் திவ்விய ஜீவன சங்கமண்டபத்துக்கு வருகைதருவார். மாலை 7மணிக்கு அங்கு பாத பூசை தியானம், வரவேற்பு ஆகியன நடைபெறும்.

## குலுக்கல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 12 F 00590 | 13 F 00530 |
| 15 U | 00331 |
| 12 B 00307 | 13 [illegible] 00043 |
| 01 D 00477 | 12 C 00302 |
| 16 X 00520 | 14 W 00249 |
| 06 T 00879 | 05 P 00768 |
| 07 G 00065 | 06 C 00775 |
| 05 O 00859 | 11 B 00390 |
| 08 L 00063 | 65 R 00384 |
| 15 G 00510 | 04 K 00420 |
| 05 N 00698 | 08 C 00757 |
| 09 O 00827 | 02 F 00738 |
| 14 G 00395 | 03 M 00204 |
| 17 Z 00700 | 06 D 00311 |
| 16 T 00162 | 07 X 00717 |
| 18 T 00892 | 04 B 00193 |
| 17 N 00235 | 13 Y 00071 |
| 04 Q 00496 | 18 B 00477 |
| 16 Q 00831 | 09 H 00204 |
| 13 L 00901 | 10 Y 00374 |
| 14 P 00725 | 13 J 00091 |
| 14 N 00622 | 17 Z 00452 |
| 08 J 00790 | 02 P 00411 |
| 04 X 00087 | 13 B 00700 |
| 04 C 00912 | 11 B 00880 |
| 16 J 00923 | 02 R 00773 |

இவை உறுதிப்படுத்தப் படவேண்டும்.

## மீண்டும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் இந்த அரசாங்கம் நியமித்த புதிய குழுவில் இடம்பெறுவோர் திரு. ஜோர்ஜ்ராஜபக்ச, ஜே ஆர். ஜயவர்த்தன திரு. வி.என். நவரத்தினம், திரு கே.வி. டி. சில்வா, திரு. எல். வி. டி. சில்வா, திரு என் விமலசேன ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

# மரண அறிவித்தல்

## திரு. சி. சோமசுந்தரம்

முத்தம்மாவின் அன்புக்கணவரும் பலப்பிட்டிய நீதவான் திரு எஸ். யோகநாதன், தற்பொழுது இங்கிலாந்திலுள்ள டாக்டர் சிவலோகநாதன் ஆகியோரின் தந்தையும் இளைப்பாறிய தபாற்தந்தி இலாகா பரிசோதகருமாகிய திரு சி, சோமசுந்தரம் (சாத்திரியார்) காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் 1-4-71 வியாழக்கிழமை மாலை 4-30 மணிக்குத் தகனக்கிரியைகளுக்காக தண்டி மயானத்துக்கு அன்னார் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும். 16/1 விதானையார் ஒழுங்கை, பண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

2609

# மரண அறிவித்தல்

## முருகேசு சின்னத்தம்பி

பண்டத்தரிப்பு முருகேசு சின்னத்தம்பி காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இராசம்மா சின்னத்தம்பியின் அன்புக் கணவரும், கனகசுந்தரம் (உடும்பிராய்) கணேசரத்தினம், துரைராசா, செல்வரத்தினம் (திட்டமிடல் வேலைவாய்ப்பு அமைச்சு) கனகம்மா, அருளம்மா, பரிமளம். (பதிவுகாரர் பண்டத்தரிப்பு) மங்கையர்க்கரசி (ஆசிரியை பெண்கள் மகா வித்தியாலயம் பண்டத்தரிப்பு) பரமேஸ்வரி (ஆசிரியை சண்முகவித்தியாலயம் திருகோணமலை) அவர்களின் அருமைத் தந்தையும் குலசிங்கம் (ஆசிரியர் ஆத்திமோட்டை அரசினர் வித்தியாலயம் திருகோணமலை) தம்பிஐயா (Muller and Phipps) சாம்பசிவம் (யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி சங்கானை) திருநேசமலர், கமலநாயகி, இராணி (ஆசிரியை நுகேகொடை) ஆகியோரின் மாமனும் ஆவர்,

அன்னாரது பூதவுடல் அவரது பண்டத்தரிப்பு இல்லத்திலிருந்து 1-4-71 மாலை 4-00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினரும் நண்பரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

2608

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1971ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் உ அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org